# மணல் வீடு

டாக்டர் – மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை – 1

ரூ. 1–0–0

தாயக வெளியீடு
பிப்ரவரி 1956

உரிமை ஆசிரியர்க்கு

காக்ஸ்டன் அச்சகம்,
சென்னை – 1

# முன்னுரை

**வா**ழ்க்கைநிலைகளில் காதல் ஒன்று. அது வாழ்க்கைக்கு அடிப்படையானதா, கட்டாயம் வேண்டுமா என்று யாராவது கேட்டால், சிறுவர்வளர்ச்சிக்கு விளையாட்டு அடிப்படையானதா, கட்டாயம் வேண்டுமா என்று திருப்பிக் கேட்டுவிடலாம். மணலில் வீடு கட்டி விளையாடும் போது குழந்தைகளின் உள்ளத்தில் எவ்வாறு தூய்மையும் உண்மையும் அன்பும் குடிகொண்டிருக்கின்றனவோ, அவ்வாறே காதலர்உள்ளத்திலும் அந்த உயர்ந்த பண்புகள் விளங்குகின்றன. புத்தர் போன்ற பெருமக்களின் வாழ்க்கையில் இந்த நிலையைத் தெளிவாகக் காணலாம்.

சங்கப் பாட்டுக்களில் பல இந்த அகப்பொருள் பற்றிய உணர்வு ததும்பியவை. அவற்றைப் பாடிய புலவர்கள் தெளிந்த அறிவும் பண்பட்ட நெஞ்சும் பெற்றவர்கள். ஆகையால், மாசற்ற காதல்வாழ்க்கையின் பல படிகளை அவர்கள் உணர்ந்து பாடியிருக்கின்றார்கள். அவற்றுள் சில பாட்டுக்களை எளிய முறையில் ஒருவாறு விளக்க முயன்ற முயற்சியே இந்த நூல்.

மு. வ.

| | |
|---|---|
| நெஞ்சம் எங்கே ? | ... 5 |
| உணர்வும் உறவும் | ... 10 |
| அந்த வழி | ... 14 |
| கவலை தீருமா ? | ... 24 |
| தாய் மனம் | ... 29 |
| உரிமையே இன்பம் | ... 38 |
| அவள் வேண்டுகோள் | ... 46 |
| மறவா ஓவியம் | ... 50 |
| நல்ல ஆசை | ... 56 |
| ஒரு குறை | ... 62 |
| நினைப்பா அது ? | ... 68 |

# 1. நெஞ்சம் எங்கே?

உயரத்தில் உறுதியான கயிறு ஒன்றைக் கட்டி அதன்மேல் ஒருத்தி ஏறி நின்று கீழே விழாமல் நடந்து அசைந்து ஆடும் ஆட்டம் உண்டு அல்லவா? அது பழங்காலத்தில் மிகுதியாக இருந்து வந்தது. மலையின்மேல் இருந்த ஊரை அடுத்த இடத்தில் இப்படி ஒருத்தி ஆடினாள். அந்த ஆட்டத்திற்குத் துணையாக இசைக் கருவிகள் ஒலித்தன. வெற்றியாக ஆடி முடித்தாள். சுற்றிலும் பலர் சூழ்ந்து நின்று பார்த்து மகிழ்ந்தார்கள். ஆட்டம் முடிந்தது. எல்லாரும் போய்விட்டார்கள். கயிறு மட்டும் கட்டியபடியே இருந்தது.

மலையில் வாழும் குரங்குகளில் ஒரு குட்டி அந்தப் பக்கமாக வந்தது. அதன் முகம் அத்திப் பழம்போல் இருந்தது. அந்தக் குட்டிக் குரங்கு கயிற்றின்மேல் ஏறியது. பயிற்சி இல்லாத காரணத்தால் அது நேரே நிற்க முடியாமல் இப்படியும் அப்படியும் அசைந்தது. சிறிது தொலைவில் ஒரு பாறைமேல் இருந்த சிறுவர்கள் இதைப் பார்த்தார்கள். முன்னே ஆடியவளைப் போலவே இந்தக் குரங்கும் ஆடுவதாக இருந்தது கண்டு, இந்தச் சிறுவர்கள் கூடி, அது அசையும்போதெல்லாம், அந்த அசைவுக்கு ஏற்றபடி கையால் தாளம் போட்டார்கள்.

அப்போது அந்த வழியாக வெளியூர் இளை ஞர்கள் இரண்டுபேர் சென்றார்கள். அவர்களும் அதைப் பார்த்து மகிழ்ந்தார்கள். பிறகு அந்த ஊர் வழியாகப் போய்த் தங்கள் ஊருக்கே மாலை யில் திரும்பிவிட்டார்கள்.

அவர்களில் ஒருவன் திருமணம் ஆகாதவன். அவன் அந்த இடத்தில் குரங்கின் ஆட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அங்கிருந்த கூட் டத்தில் ஒரு பெண்ணின் உள்ளத்தைக் கவர்ந் தான். அவன் பார்த்தான். அவளும் பார்த்தாள். உடன் இருந்த நண்பனுக்கு இது தெரியாது. கண்களின் பேச்சைக் காதால் கேட்க முடியுமா? நண்பன் ஆட்டத்தை மட்டும் பார்த்துக்கொண் டிருந்தான்.

அந்த ஊரின் வழியாகத்தான் இரண்டுபேரும் சென்றார்கள். அவ்வாறு செல்லும்போது அதே பெண் ஒரு வீட்டின் வாயிலில் நின்றுகொண்டிருந் தாள். கண்கள் முன்கொண்ட உறவை வளர்த் தன. உடன் வந்த நண்பனுக்கு இதுவும் தெரி யாது. இரண்டு பேரும் நடந்துபோய்த் தங்கள் ஊரை அடைந்தார்கள்.

மறுநாள் அவன் மட்டும் தனியாக அந்த ஊருக்கு வந்தான். அந்தத் தெரு வழியாக நடந் தான். திரும்பினான். நண்பனுக்குச் சொல்லாமல், அவனை அழைக்காமல் இவ்வாறு தனியாகவே சில நாள் வந்து வந்து திரும்பினான். காதல் வளர்ந்தது.

பல வாரங்கள் கழிந்தன. நண்பன் அவனை அடிக்கடி தேடியது உண்டு. அவனை முன்போல் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் முன்போல் உள் ளம் கலந்து பேசுவதில்லை. நெடுநேரம் உடன் இருந்து பழகுவதும் இல்லை. இந்த வேறுபாட் டிற்குக் காரணம் இன்னது என்று நண்பனுக்கு விளங்கவும் இல்லை.

குடும்பக் கவலையோ – வேறு துயரமோ – அவனுக்கு இருக்கலாம் என்று நண்பன் எண்ணி னான். கேட்டுப் பார்த்ததில் அப்படி ஒன்றும் இருந்ததாகவும் தெரியவில்லை. அவனை இருக்க இருக்க முன்னைவிடப் பழக்கத்தைக் குறைத்துக் கொண்டு ஒதுங்கி ஒதுங்கி நின்றான். பழகினாலும் பேசினாலும் மேலுக்கு உறவாடுவது போல் உயிரற்ற, உணர்ச்சியற்ற பழக்கமாகவும், பேச்சா கவும் இருந்தன. இந்த நிலைமையை நண்பனால் பொறுக்கவும் முடியவில்லை. ஆனால், அவன் வேண்டுமென்றே ஒதுங்குவதாக இல்லாமல், கவலையோடும் சோர்வோடும் இருப்பதைப் பார்த்து நண்பன் இரக்கமே கொண்டான். ஒரு நாள் துணிந்து கேட்டுவிட்டான்.

“என்ன, நீ எப்போது பார்த்தாலும் கவலை யோடு சோர்வாக இருக்கிறாய். இருக்க இருக்க ஊமையாகப் போய்விட்டாய். வலியப் பழகினா லும், மனம் கலந்து பேசுவதில்லை. நான் ஏதாவது உனக்குத் தவறு செய்துவிட்டேனா ?” என்றான் நண்பன்.

“அப்படி ஒன்றும் இல்லையே! யார் சொன்னது?’ என்றான் அவன்.

“ஒன்றும் இல்லையானால் நீ இப்படி இருக்கக் காரணம் என்ன? ஏதோ பெரிய கவலை பிடித்தவன் போல் இருக்கிறாயே! உன் மனத்தை எங்கேயாவது அடமானம் வைத்திருக்கிறாயா” என்று நண்பன் நகைத்துக்கொண்டே கேட்டான்.

ஏதோ கதை சொல்வதுபோல் அந்தக் காதலன் மெல்லப் பேச்செடுத்து உண்மையை ஒளிக்காமல் சொல்லத் தொடங்கினான். இனி மேல் மறைத்துப் பயனில்லை என்று உணர்ந்துதான் உண்மையான நட்புக் கொண்ட அந்த நண்பனிடம் சொல்லத் தொடங்கினான்:

“நாம் இரண்டு பேரும் அந்த மலையில் ஒரு நாள் குரங்குக் குட்டி கயிற்றின்மேல் ஆடியதைப் பார்த்தோம் அல்லவா?” என்று நண்பனைக் கேட்டான்,

“ஆமாம்! அந்த ஆட்டத்தைப் பார்த்தோம் அதனால்...” என்றான் நண்பன்.

“அங்கே ஓர் ஊர் இருக்கிறது அல்லவா?”

“ஆமாம்.”

“அந்த ஊரில் ஒருத்தி வாழ்கின்றாள். அவள் கையில் அகப்பட்டுக்கொண் டிருக்கின்றது என் நெஞ்சம். அதை மற்றவர்களால் விடுவிக்க முடியாது. அவளே விடுவித்தால்தான் உண்டு.”

இவ்வாறு அந்தக் காதலன் சொல்லிய பிறகு தான் நண்பனுக்கு உண்மைக் காரணம் தெரிந்தது. தெரிந்ததும் முன்னிலும் மிகுதியாகவே அவன்மேல் அன்பு கொண்டு அவனுடைய வாழ்க்கைக்குத் துணைநின்றான்.

அந்தக் காதலன்பேச்சை ஒரு புலவர் சொல்லோவியமாக்கித் தந்திருக்கின்றார். புலவருடைய இயற்பெயரை எப்படியோ முன்னோர்கள் மறந்து விட்டார்கள். ஒருவேளை அம்பலவனார் என்பதே இயற்பெயராகவும் இருந்திருக்கலாம். ஆனால், அவருடைய பாட்டைப் படித்துப் படித்து மகிழ்ந்தவர்கள் அந்தக் குரங்கின் ஆட்டத்திற்குத் துணையாகத் தாளங் கொட்டிய சிறுவர்களை மறக்கவில்லை. தாளங்கொட்டிய செயல்—கொட்டு என்ற சொல்—நினைவை விட்டு நீங்காமல் நின்ற காரணத்தால், கொட்டம்பலவனார் என்று புலவர் பெயரைக் குறித்திருக்கின்றார்கள்.

*கழைபாடு இரங்கப் பல்லியம் கறங்க*
*ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று*
*அதவத் தீங்கனி அன்ன செம்முகத்*
*துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்*
*கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து*
*குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும்அக்*
*குன்றகத் ததுவே குழுமிளைச் சீறூர்*
*சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி*
*கொடிச்சி கையகத் ததுவேபிறர்*
*விடுத்தற்கு ஆகாது பிணித்தஎன் நெஞ்சே.*

— நற்றிணை - 95

[கழை — குழல். பாடு — பக்கம். இரங்க — ஒலிக்க. பல்லியம் — பல இசைக் கருவிகள். நோன்கயிறு — வலிய கயிறு. அதவம் — அத்தி. பறழ் — குட்டி. தூங்க — அசைய. கொடிச்சி— மலைநாட்டுப் பெண்.]

---

## 2. உணர்வும் உறவும்

சிறு பெண்கள் சிலர் கூடி மணலில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் புன்னைக் கொட்டைகளை வைத்துக்கொண்டு விளையாடினார்கள். காசு முதலியவைகளை மணலில் அழுத்தி மறைத்துப் பிறகு மணலைத் தோண்டி எடுத்துப் பார்ப்பதில் சிறுவர்களுக்குத் தனி இன்பம் உண்டு. அழித்தல் ஆக்கல் என்னும் ஆற்றல் தங்களிடம் இருப்பதை அப்போது அவர்கள் உணர்கிறார்கள் அல்லவா? அதுதான் இன்பத்துக்குக் காரணம். பொம்மைகளை வைத்து விளையாடுவதில் காக்கும் ஆற்றல் இருப்பதை உணர்ந்து மகிழ்கிறார்கள். இவ்வாறு படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலில்தான் சிறுவர்களும் இன்பம் காண்கின்றார்கள்.

இப்படி விளையாடி வந்த புன்னைக் கொட்டைகளில் ஒன்றை மறந்து விட்டுவிட்டார்கள். அந்தக் கொட்டை மணலிலேயே அழுந்திச் சிலநாள் கிடந்தது. அதனுள் கிடந்த உயிர் வாளா இருக்குமா? அது வெளிப்பட்டது. புன்னைக்கொட்டை புன்னைச் செடியாகித் தோன்றியது.

விளையாடிய சிறுமியர் பலருள் ஒருத்தி அந்த விந்தையைக் கண்டு வியந்தாள். படைத்தலும் மறைத்தலும் ஆகிய விளையாட்டுக்கு உரிய புன்னைக் கொட்டை இப்போது காத்தல் தொழிலுக்கு உரிய இளஞ் செடியாக விளங்கியது. சிறுமியோ இளந் தாயாகிவிட்டாள்; அந்தச் செடியின்மேல் கொண்ட அன்புதான் அவள் மனத்தைத் தாய்மனம் ஆக்கிவிட்டது.

சிறு செடி வளர்ந்து ஓங்கும் என்று கனவு கண்டாள்; வளர்க்க முனைந்தாள்; அன்பு சொரிந்தாள்!

அந்தப் புன்னைச் செடிக்குத் தண்ணீர் மட்டும் ஊற்றினால் போதும். ஆனால் அது யார் செய்யும் செயல்? அதைச் செடி என்று அறிந்த மூளை உடையவர் செயல். சிறுமியோ தன் அன்பை முன்னே செலுத்தி உணர்ந்து வளர்த்தாள். தன் தாய் தன்னை வளர்த்த முறை – தேனும் பாலும் ஊட்டித் தன்னை வளர்த்த முறைதான் சிறுமியின் உணர்வில் நின்றது. தானும் அந்த இளஞ் செடியை அவ்வாறு வளர்க்க முனைந்தாள்.

இளம் புன்னைச் செடிக்கு நாள்தோறும் தேனும் பாலும் கிடைத்துவந்தன; தண்ணீரும் ஒவ்வொரு வேளை கிடைத்திருக்கும்.

பல ஆண்டுகள் கழிந்தன. செடி மரமாக ஓங்கியது. சிறுமி மங்கையாக வளர்ந்தாள். திருமணம் நடந்தது. இல்வாழ்க்கை அமைந்தது. குழந்தைச் செல்வமும் வாய்த்தது. இந்தக் குழந்தை ஒரு பெண் குழந்தைதான்.

இந்தக் குழந்தை வளர்ந்து சிறுபெண் ஆனது. பெற்ற தாய்க்கு இந்தச் சிறுபெண் முதல் குழந்தையா? இரண்டாம் குழந்தையா? உணர்வு உலகம் கண்டவர்கள் உண்மையைச் சொல்வார்கள். இந்தச் சிறுபெண் அவளுக்கு இரண்டாம் குழந்தைதான். அவள் மனம்— அன்பு நெஞ்சம்— வளர்த்த முதல் குழந்தை புன்னைமரம் தானே!

இதை அந்தத் தாயே ஒருநாள் சொல்லி விட்டாள்.

ஒருநாள் அவளுடைய சிறு பெண் அழுதாள்; தேனும் பாலும் பருகாமல் தொல்லை கொடுத்தாள். அப்போதுதான் சொன்னாள்: "அம்மா! நீ இப்படிப் பாலும் தேனும் பருகாமல் அழுகின்றாயே! உன்னால் எனக்கு எவ்வளவு தொல்லை! உன் அக்கா ஒரு நாளும் அப்படிச் செய்தது இல்லையே" என்றாள்.

"யாரம்மா அக்கா?" என்று மகள் கேட்டாள். "இதோ இருக்கின்றதே இந்தப் புன்னை மரம்தான். இதுதான் நான் முதலில் வளர்த்த குழந்தை. நாள் தோறும் என் கையால் தேனும் பாலும் ஊட்டினேன். ஒரு நாளும் மறுக்கவில்லை; அழவில்லை; கோபம் வரவில்லை. ஒருநாளும் தொல்லை கொடுக்காமல் உண்டுவந்தது. நீ மட்டும் இப்படிச் செய்கின்றாயே" என்றாள் தாய்,

மகளின் மனத்தில் அரைகுறையாக இந்தச் செய்தி பதிந்தது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்

தன. அவளுடைய அறிவு வளர்ந்தது. அப்போது புன்னை குழந்தையாகப் பிறந்த கதையையும் வளர்ந்த வரலாற்றையும் தாய் விளக்கினாள். மகளுக்கு உண்மை விளங்கிவிட்டது.

மகளும் உற்ற வயது அடைந்தாள். வாழ்க்கை தொடங்கினாள்.

ஒரு நாள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரத்து நிழலில் இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச் சுவையும் பெருகி விட்டன. காதல் பேச்சு, காதல் விளையாட்டு இவற்றுக்கு இடையே திடீரென்று காதலியின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தடையாக எழுந்தது. பேச்சும் மகிழ்ச்சியும் தடைப்பட்டன.

காரணம் வேறொன்றும் இல்லை. நிழலில் இருந்த அவள்நினைவு நிழல் தந்த புன்னை மரத்தின் மேல் சென்றது. இளமை முதல் தன் உள்ளத்தில் ஊறி வந்த உறவுமுறை முன்வந்து நின்றது.

புன்னை மரம் தமக்கை; தான் தங்கை—இதை எப்படித்தான் மறக்க முடியும்? ஒருநாள் பாடமா? தமக்கையின் எதிரில் காதல் பேச்சும் விளையாட்டும் நிகழ்த்தத் தங்கைக்கு மனம் இல்லை. 'என்ன செய்தோம்' என்று நாணம் அடைந்தாள்.

இதை அவளுடைய உயிர்த்தோழி அந்தக் காதலனுக்குத் தெரிவித்தாள்.

இந்தக் கருத்து ஒரு பழம் பாட்டில் உள்ளது. பாடிய புலவர் யார் என்று தெரியவில்லை. தமிழ்

நாடு பெயரை மறந்துவிட்டது. ஆனால், நல்ல காலம், அந்தப் பாட்டை மறக்கவில்லை.

*"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி*
*மறந்தனம் துறந்த காழ்முளை அகைய*
*நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்த்தது*
*நும்மினும் சிறந்தது நுவ்வை யாகும்" என்று*
*அன்னை கூறினள் புன்னையது நலனே ;*
*அம்ம நாணுதும் நும்மொடு நகையே......*

—நற்றிணை - 172

[*காழ் - கொட்டை. அகைய - முளைத்து வளர. நுவ்வை - உன் தமக்கை.*]

---

# 3. அந்த வழி

புலவர்கள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு கண்டு களிக்கும் இயல்புடையவர்கள். இயற்கையின் திருக்கோயிலாக 'மண்ணெழுந்து விண் காட்டும் மலைகள்' அவர்களின் உள்ளங் கவரும் ஆற்றல் உடையவை. ஆதலால், கபிலர் போன்ற பெரும் புலவர்கள் குறிஞ்சி நிலத்தில் பெரிதும் வாழ்ந்து குறிஞ்சி வளத்தை மிகுதியாய்ப் பாடியுள்ளனர்.

பெருங்குன்றூர் கிழார் என்று புலவர் ஒருவர் பெயர் சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றது. அவர் பெயரே அவர் வாழ்வை அறிவிக்க வல்லதாக விளங்குகின்றது. பெருங்குன்று என்ற மலை

ஒன்று ; அதனை அடுத்த (அல்லது அதன்மேல் உள்ள) ஊர் ஒன்று ; அவ்வூரில் உரிமையுடைய தாய் வாழ்ந்த கிழார் குடி ஒன்று ; அக்குடியில் புலமை சிறக்கத் தோன்றிய புலவர் ஒருவர் ; அவர் தாம் பெருங்குன்றூர் கிழார் என்பவர். பெருங் குன்றூரில் வாழ்ந்த பெரும் புலவர், மலைவாழ்க்கை ஒன்றை – மலையில் நிகழ்ந்த இயற்கை நிகழ்ச்சி ஒன்றை – எடுத்துரைப்பாரானால், அது போற்றத் தக்கது அல்லவா ?

புலவர் பெருமக்கள் நேரில் கண்டறிந்த காட்சி களை உள்ளத்தே பதித்துப் பாடுதலும் உண்டு ; கேட்டறிந்த காட்சிகளைக் கற்பனை செய்துகொண்டு பாடுதலும் உண்டு ; ஒரு நிகழ்ச்சியின் முடிவாகக் கண்ட சிறு பகுதியைக் கொண்டு நிகழ்ச்சி முழு மையும் உய்த்துணர்ந்து பாடுதலும் உண்டு. அவ் வாறு பெருங்குன்றூர் கிழார் பாடிய பாட்டொன்று அகநானூற்றில் உள்ளது.

விடியற் காலையில் ஒரு புற்று உள்ள வழியாகப் புலவர் சென்றார். அவ்வழி இதற்குமுன் சில முறை சென்று பழகியதுதான். ஆனாலும் அன்று காலையில் புலவர் அந்தப் புற்று வேறுபட்டிருத்தலை உணர்ந்தார். சிறிது சிதைவு கண்டார். மண் குறைபட்டுத் தோன்றுவதை அறிந்தார். அதன் அருகே ஒரு பாம்பு உடல் கிழிந்து செத்துக் கிடப்ப தைக் கண்டார். மலைகளில் பழகினவர்களுக்கு இவற்றின் காரணமெல்லாம் தடையின்றி விளங் கும். ஆதலால் புலவர் எளிதில் காரணம் உணர்ந்

தார். இரவு நடந்த காட்சியைக் கற்பனையுலகில் காண முயன்றார். காட்சி அமைந்தது.

அப்புற்றினுள் ஈசல்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் புற்றுஞ் சோறும் உடன் கிடந்தது. புற்றின் உட்புறத்தை ஆராய்ந்தவர் யார்? அங்கே சிதல்கள் அமைத்த அமைப்பு எத்தகையதோ? அவற்றின் அரிய முயற்சியால் எழுந்த கோபுரம் போன்ற செந்நிறப் புற்றைக் கண்ட பாம்பு அதனிடம் ஒதுங்க வந்தது. ஒதுங்குமிடமாகப் பெற்ற புற்றையே வாழ்மனையாகக் கொள்ளத் தொடங்கிற்று. சிதல்களின் பெரு முயற்சியாலான புற்று, ஒரு முயற்சியும் இல்லாத பாம்பிற்கு உயர்ந்த வீடாயிற்று. ஆனால் கொடுமை அல்லவா? முயற்சி ஒருவரது! பயன் மற்றொருவரது! உயர்திணையாகிய மக்களிடத்தில்தான் இத்தகைய கொடுமை இயல்பாகக் காணப்படுகின்றது; பொருளால் வலியாரும் அறிவால் வலியாருமாக இருதிறத்தாரும் கூடி இயற்றும் சட்டங்கள் முயற்சிக்கும் பயனுக்கும் தொடர்பு நேராதவாறு காக்கின்றன. ஆனால் அஃறிணை யுயிர்களிடத்தும் இத்தகைய அநாகரிக முறை காணப்பட வேண்டுமோ? வலியாரின் வலிமையால் மெலியார் அடங்குதல்போல, பாம்பின் வீற்றிருக்கையால் புற்றினுள் கிடந்த உயிர்கள் என்ன பாடு பட்டனவோ? மெலியார் என்று இரங்கத் தக்காரிடையேதான் புரட்சி செய்யும் வலியார் தோன்றுகின்றனர். இத்தகைய நிகழ்ச்சி, உலகில் அஃறிணையுயிர்களிடத்திலும் நிகழ்கின்றது.

புற்றின் புரட்சி ஒரு நாள் நள்ளிரவில் நிகழ்ந்தது. புரட்சி நடத்தியவர் கரடியார். கரடியின் பெரிய கைகளில் அமைந்த கூரிய நகங்களே புரட்சிப் படைகள். புற்றினுள்ளே பாம்பு இருந்தது. அதற்கு அஞ்சிய உயிர்கள் இன்னும் உட்பகுதியில் அடங்கிக் கிடந்தன. கரடி வந்தது. படை கொண்டு வந்தது. அதற்கு விருப்பமான உணவாகிய புற்றுஞ் சோறு புற்றினுள் கிடைக்கும் என்றுதான் கரடி நாடி வந்தது. அது நாடியது ஒன்று; அதற்காகச் செய்த செயலே புரட்சியாக முடிந்தது. கூரிய நகங்களையுடைய் கையைப் புற்றினுள் விட்டது. அங்கே கிடைத்தவற்றை நகங்களால் கிளறியது. இருந்த பாம்பு நகங்களிடையே அகப்பட்டது. பாம்பின் மெல்லிய உடல் கூரிய வலிய நகங்களை எதிர்த்து என்ன செய்ய முடியும்? பாம்பு சிதைந்து செத்தது. நகங்கள் பாய்ந்த இடங்களில் குருதி வடிந்து கறை படிய, தன் கையோடு பாம்பின் உடலும் வெளிவர, அதனை உதறிவிட்டுத் தன் உணவைப் பெற்றுத் தின்று சென்றுவிட்டது கரடி.

கிளறிக் கிடந்த புற்றும், செத்துக் கிடந்த பாம்பும் விடியற்காலையில் புலவரின் கண்ணிற் பட்டன. புலவர் எண்ணினர்; அறிந்தார்; இரவு நடந்ததை அவ்வாறே கற்பனை யுலகில் காண வைத்தார்:

*ஈயற் புற்றத்து ஈர்ம்புறத் திறுத்த*
*குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை*

*தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்*
*பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்.*

[ஈயல் - ஈசல். குரும்பி - புற்றாஞ்சோறு. வல்சி - உணவு. ஏற்றை - ஆண் கரடி. உகிர் - நகம். கதுவல் - பற்றல். மதன் - வலி. பானாள் (பால் நாள்) - நடு இரவு.]

மற்றொரு நாள் அண்மையில் உள்ள மலை மீதேறிச் செல்லும்போது புலவர் வேறு சில கண்டார். மலையடுக்கத்தில் பலா மரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. மூங்கில்கள் ஓங்கி வளர்ந்திருந்தன; காற்றால் ஒன்றோடொன்று தாக்கி ஒலித்தன. வழியெல்லாம் இரத்தக் கறை படிந்திருத்தலைக் கண்டார். ஆங்காங்கே சில தசைத் துண்டுகளுடன் கூடிய எலும்புகளும் கண்டார். சிதைந்த தலையும் கண்டார்; அதனை உற்று நோக்கிக் காட்டுப் பன்றியின் தலை என்று அறிந்தார். முந்திய இரவு புலி ஒன்று பன்றியைக் கொன்று பலா மரச் செறிவின் வழியே இழுத்துச் சென்றிருக்க வேண்டும் எனத் தெளிந்தார்.

*கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை*
*பலாஅமல் அடுக்கம் புலர ஈர்க்கும்*
*கழைநரல் சிலம்பின் ஆங்கண்.*

[கேழல் - பன்றி. அட்ட - கொன்ற. கழை - மூங்கில். சிலம்பு - மலைப்பகுதி.]

அந்தக் காட்சியை மறவாதவராய்ப் புலவர் அப்பால் சென்றார். அங்கே வாழை மரங்களும்

சுரபுன்னை மரங்களும் செழித்து வளர்ந்திருந்த காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். அழகிய காட்சிகளைக் கலைஞர் மறப்பது உண்டா?

அழகு மிக்க அந்தக் காட்சிகளை நினைந்து நினைந்து இன்புற்றவராய்ப் புலவர் மலைமீது ஏறிச் சென்றார். உச்சியை நோக்கி மேற்சென்றார். அங்கே ஒரு குகையின் அருகே பரப்பினாற்போல் கிடந்த பாறையின்மேல் இருந்தார். சுற்றிலும் உள்ள காட்சிகளையும் வானத்தே தோன்றும் முகில்களையும் எல்லையற்றுப் பெருமை பெற்று விளங்கும் வெட்ட வெளியினையும் நோக்கி நோக்கி அமைதிக் கடலுள் ஆழ்ந்தார். திடீரென ஓர் ஓசை கேட்டது. 'தட ததத் தயம் தம்' என்ற எதிரொலி அவருடைய அமைதியைக் கலைத்தது.

ஓசை கீழே இருந்து வருதலை உணர்ந்து கீழ் நோக்கிப் பார்த்தார். அவர்கண்ணில் ஒன்றும் புலப்படவில்லை. மலைக் காட்சி போதும் என்று எண்ணி இறங்கத் தொடங்கினார். வரும்போது சிறிது தொலைவில் களிறும் பிடியுமாக இரண்டு யானைகள் செருக்குடன் செல்வதைக் கண்ணுற்றார். அவை சென்றபிறகு தொடர்ந்து இறங்கிச் சென்றார். செல்லும்போது ஓர் எண்ணம் எழுந்தது. அந்த உச்சியில் கேட்ட எதிரொலிக்குக் காரணமான ஓசை இந்த யானைகளின் செயலால் எழுந்ததோ என்று எண்ணினார். எண்ணிக்கொண்டே புன்னை மரங்களும் வாழை மரங்களும் செறிந்த சாரலில் வந்துற்றார். ஏறும்போது தம் உள்ளத்தைக் கவர்ந்த

மரச்செறிவை இறங்கும் இப்போது உற்று நோக்க விழைந்தார். மரச்செறிவினிடையே சிதைவு கண்டார். இன்னும் சில வேறுபாடுகளும் கண்டார். நன்றாக அமைந்திருந்த நிலம் புழுதியாய்க் கெட்டிருத்தலைக் கண்டார். அங்கே யானைகளின் அடிச்சுவட்டையும் நோக்கினார். அந்த யானைகளே இந்த மரங்களை ஒடித்துப் போட்டிருக்க வேண்டும் என்று கருதினார். மரச் செறிவினிடையே புகுந்தார். அங்கே உயர்ந்தோங்கிய தேக்கு மரங்களும் சந்தன மரங்களும் குறிஞ்சி மரங்களும் கிளை கிளையாய் ஒடிந்து சாய்ந்திருக்கக் கண்டார். அருகில் உள்ள ஒரு பள்ளத்தில் மண் சரிந்து வீழ்ந்திருப்பதையும் அப்பள்ளத்தினுள்ளே மரக்கிளைகள் பல அடுக்கிக் கிடப்பதையும் கண்டார்; கண்டதும் அங்கே திகைத்து நின்றார். மரங்களை ஒடித்து இப்பள்ளத்தில் இட்ட காரணம் என்னவோ என்று ஆய்ந்தார். பள்ளத்துச் சரிவில் யானையின் பெரிய அடிச்சுவடுகளைக் கண்டு ஒருவாறு தெளிந்தார். "வாழை மரங்களின் வழியாக வரக் கண்ட அந்தக் களிறு இச் சரிவில் அகப்பட்டுப் பள்ளத்தே வீழ்ந்தது; மேலே வர முடியாமல் வருந்தியது; உடன் வந்த பிடி அதற்காக வருந்தியது! பெருமரங்களின் கிளைகளை யெல்லாம் ஒடித்துப் பள்ளத்தினுள்ளே இட்டு அடுக்கியது. அடுக்கிய மரத்துண்டுகளையே படியாகக்கொண்டு கால் வைத்து வைத்து மெல்ல மெல்லக் களிறு மேலே ஏறிவிட்டது. பிடி மகிழ்ந்தது. இவ்வாறு

வெற்றி பெற்றதே அவற்றின் செருக்கிற்குக் காரணம் போலும்! இம்மரங்களை ஒடித்த ஓசையே உச்சியில் எதிரொலித்தது. 'தட தகத் தயம் தம்' என்ற எதிரொலிக்குக் காரணம் இதுவே. ஆ! எங்கிருந்து எழுந்த ஓசை எங்கே எதிரொலித்தது! யானைகளின் ஆற்றலே ஆற்றல்! இடுக்கண் உற்றபோது உதவும் அவற்றின் அறிவே அறிவு! அவற்றின் காதல்வாழ்வு எத்தகையது!'' என்று இவ்வாறு வியந்தார். அந்த எதிரொலி அவர்செவியினுள்ளே விடாது ஒலிக்கக் கேட்டார். கேட்கும் போதெல்லாம் இந்த நிகழ்ச்சியைக் கற்பனையாக அமைத்துக் கண்டார்.

*......வழையொடு*
*வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பின்*
*படுகடுங் களிற்றின் வருத்தம் சொலிய*
*பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்*
*விண்தோய் விடரகத் தியம்பும்......*

[*வழை - சுரபுன்னை. அசும்பு - நீர் கசிந்தோடும் பள்ளம். சொலிய - தீர்க்க. விடாகத் தியம்பும் என்ற தொடரிலேயே அந்த எதிரொலி கேட்டலை நுட்பமாக அமைத்தார் புலவர்.*]

இவ்வளவும் இயற்கைப் பொருள்கள்; இயற்கை நிகழ்ச்சிகள். இவற்றைப் பாடிய புலவர் இவற்றினும் சிறந்த உள்ளத்தின் இயல்பையும் பாட வேண்டிச் சிறந்ததொரு முறையைக் கையாண்டார். சுற்றிலும் உள்ள மலை முதலிய நிலங்களையும் அவற்றில் வாழும் உயிர்களையும் பாடுதல் நல்லதே. அதனை இயற்கைப் பாட்டு என்பார்கள்.

அதைவிடச் சிறந்த பாட்டு உள்ளது. அதுவே மன நிலையைப் புலப்படுத்தும் ஓவியமாக அமையும் பாட்டு. மன நிலை நுட்பமானது; புலவர் பெருமக்களுக்கே புலனாவது; வாழ்க்கை உயர் நிலை உறுதற்கு வழிகோலுவது. அதனைப் பாடுதலே நோக்கமாகக் கொண்ட புலவர், சூழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை அவ்வோவியத்திற்கு உரிய அமைப்பாகக் கொண்டனர். இலக்கண நூலார் நிலங்களையும் இயற்கைப்பொருள்களையும் தொழில்களையும் பிறவற்றையும் முதற்பொருளென்றும் கருப்பொருளென்றும் கொண்டனர். ஆனால் மன நிலையைப் புலப்படுத்தும் மக்கள்வாழ்வின் கூறுகளையே உரிப் பொருள் என்றனர். மேனாட்டுப் புலவர்களும் இயற்கைப் பாட்டுக்களைவிட மன நிலை புலப்படுத்தும் பாட்டுக்களே சிறந்தவை என ஆராய்ந்து கூறியிருக்கின்றனர்.

இது பண்டைத் தமிழ்ப் புலவர் தெளிந்த உண்மை. ஆகையால், மேற்கண்ட எல்லா நிகழ்ச்சிகளையும் காதலரின் மனநிலையைப் புலப்படுத்தும் கருவியாக்கினர். அன்பு கெழுமிய காதலி ஒருத்தி தோழிக்குக் கூறும் கருத்தாகப் பாட்டை அமைத்தார். தன் காதலன் மதிற்புறத்தே வந்து நிற்கும் நேரத்தில் சொல்லும் சொல்லாக அமைத்தார். "பிறர் அறியாமல் வாழும் அன்புவாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவது தகாது; பிறர் அறிய மணஞ் செய்துகொண்டு இடரினும் தளரினும் கலங்காது வாழ்வதே நலம்"

என்று துணிந்த தன் கருத்தைத் தலைவனுக்குப் புலப்படுத்த விரும்பினாள். நேரில் கூறுவதற்கோ மனம் இசையவில்லை ; இசைந்தாலும் பயன் குறைவே. இது தன் உண்மையான எண்ணம் என்று அவன் உணர வேண்டும். அது கருதியே, தோழியிடம் தன் குறையை எடுத்துக்கூறி வருந்துபவள்போல் கூறினாள். தலைவன் வருவது தெரிந்தும் தெரியாததுபோல் நடித்து, அவன் கேட்கும்படியாகத் தோழியோடு கூறினாள். கேட்ட தலைவன் திருந்தி நல்வழிப்படுவான் அல்லவா ? இந்த உயர்ந்த நோக்கத்திற்கு, இயறகை துணைசெய்தது. நள்ளிரவில் பாம்பு சாகப் புற்றைக் கிளரும் காட்சியைச் சொல்லி வழியின் தீமையைத் தெரிவித்தாள். புலியின் செயலையும் தெரிவித்தாள். இத்தகைய கொடிய வழியில், இவ்வாறு அச்சம் மிகுந்த நள்ளிரவில் அவரிடத்தில் செல்லவும் தன் மனம் துணிந்தது என்றாள். களிறு பட்ட துன்பமும் பிடி ஆற்றிய செயலும் கூறினாள் ; அதன் வாயிலாகத் தலைவன் வாழ்க்கையில் எந்த நிலையிலும் தான் உறுதி பூண்டு துணை செய்யும் கடப்பாட்டைக் குறிப்பாகத் தெரிவித்தாள். மறைந்து நின்று கேட்கும் தலைவன்மனம் தலைவியின் அன்பின் பெருமையையும் காதற் சிறப்பையும் நினைந்து நினைந்து உருகும் அல்லவா? இவற்றைக் கேட்ட மனம் திருந்தாது நிற்பதும் உண்டோ ? முழுப்பாட்டும் வருமாறு :—

***ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த***
***குரும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை***

தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானுட் கங்குலும்
அரிய அல்லமன் ; இகுளை ! பெரிய
கேழல் அட்ட பேழ்வாய் ஏற்றை
பலாஅமல் அடுக்கம் புலர ஈர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
வாழை ஓங்கிய தாழ்கண் அசும்பிற்
படுகடுங் களிற்றின் வருத்தம் சொலியப்
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்தோய் விடரகத் தியம்பும் அவர்நாட்டு
எண்ணரும் பிறங்கல் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய ஒதுங்கி மென்மெலத்
துளிதலைத் தலைஇய மணியேர் ஐம்பால்
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழியூஉ
நெறிகெட விலங்கிய நீயிர் இச்சுரம்
அறிதலும் அறிதிரோ என்னுநர்ப் பெறினே.

—அகநானூறு—௲

[பிறங்கல் — மலை. மான் — விலங்கு. அதர் — வழி.
ஈற்று — கன்று ஈன்ற பசு. நெருநல் — நேற்று.]

———

# 4. கவலை தீருமா ?

ஒரு வீட்டின் முற்றத்தில் வயலை (பசலைக்) கொடி படர்ந்து அழகாக இருந்தது. அழகான காட்சி சிறுவர் உள்ளத்தைக் கவரும். ஆகையால், அந்த வயலைக் கொடியின் பக்கத்தில் உட்கார்ந்து அந்த வீட்டுப் பெண்—சிறு பெண்—விளையாடுவது

வழக்கமாக இருந்தது. அவளுடைய விளையாட்டுப் பொருள்களாகிய பந்தையும் பொம்மையையும் அங்கே வைத்துக்கொண்டு விளையாடிவந்தாள்.

அந்த வீட்டுப் பசு, கன்று ஈன்றது. சில நாள் வெளியே சென்று மேயாமல் வீட்டிலேயே கன்றுடன் இருந்துவந்தது. ஒருநாள் அதன் பார்வை அந்தச் செழுமையான வயலைக்கொடியின்மேல் சென்றது. எப்படியோ அங்கு வந்து வயலைக்கொடியைத் தின்னத் தொடங்கியது.

அங்கே பொம்மை வைத்து விளையாடிக் கொண்டிருந்த பெண்ணுக்குப் பசு வந்தது தெரியவில்லை. சிறிது நேரத்தில் கொடி இழுக்கப்பட்டுத் தின்னப்படுவதை அறிந்தபோது திரும்பிப் பார்த்தாள்; திடுக்கிட்டு எழுந்தாள்; கையிலிருந்த பந்தை எறிந்துவிட்டுப் பொம்மையையும் விட்டு விட்டு எழுந்து ஓடிவந்துவிட்டாள். தொலைவில் வந்துவிட்ட பிறகு பந்தையும் பொம்மையையும் நினைத்து அலறினாள். அவளுக்கு அது வெறும் பொம்மை அல்ல; அருமைக் குழந்தை என்றும் செல்வமகள் என்றும் அந்தப் பொம்மையைப் பாராட்டி வளர்த்துவந்தாள் அல்லவா? தவிர, அழகான வயலைக்கொடியைப் பசு மேய்வதையும் அவளால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. அலறி வயிற்றை அடித்துக்கொண்டாள். அலறலைக் கேட்ட தாய் உடனே ஓடிவந்து கண்டு அவளுடைய துன்பத்தைத் தீர்த்தாள்.

இது ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி. 'நம் மகள் அறியாக் குழந்தை' என்று தாய் பல நாளும் எண்ணு வதற்கு இந்த நிகழ்ச்சி காரணமாக இருந்தது.

தாய் மகளைச் சீரும் சிறப்புமாக வளர்த்துவந் தாள். செவிலித்தாய் ஒருத்தி வளர்ப்பதற்குத் துணையாக இருந்தாள். தேனோடு கலந்த பாலை உண்பதற்கும் அவளை வேண்டி வேண்டி ஊட்டி வளர்த்தார்கள். வற்புறுத்தி உண்ணச் செய்தால் அவள் விம்மி விம்மி அழுவாள். மான் போன்ற பார்வையிலே தன் வருத்தத்தைப் புலப்படுத்தி அழுவாள். இவ்வளவு செல்வமாக வளர்ந்து வந்தாள் அவள்.

அருமை மகள் வளர்ந்து அழகு நிரம்பினாள்; பெற்றோர் அறியாமலே ஒருவனுடைய காதலியாக மாறிவிட்டாள். பெற்றோர் அறிந்தால் மனம் நோவார் களே என்ற கவலை ஒரு புறம்; காதலுக்கு உள்ள இடையூறுகளைக் கடந்து வெல்ல வேண்டுமே என்ற கவலை மற்றொரு புறம்; இவற்றிற்கு இடை யில் அவளுடைய மனப் போராட்டம் பெருகி விட்டது.

பெற்றோருக்கு மகளாக இருந்து காதலைப் புறக்கணிக்க அவளால் முடியவில்லை. பெற்றோரு டைய கட்டுப்பாட்டையே புறக்கணிக்கத் துணிந் தாள்; காதலனுடைய வாழ்க்கைத்துணைவி ஆவ தற்கு உறுதி பூண்டாள். இந்த உறுதி பிறந்ததும் மனப் போராட்டம் முடிந்தது.

ஒரு நாள் நள்ளிரவில் பெற்றோர் அறியாமல் வீட்டை விட்டுக் காதலனோடு புறப்பட்டு வெளி யூர்க்குச் சென்றுவிட்டாள்.

பொழுது விடிந்ததும் செவிலியும் தாயும் தந்தையும் தமையன்மாரும் தேடத் தொடங்கி விட்டார்கள். சிறிதுநேரம் கழித்துச் செய்தி ஒன்று வந்து எட்டியது. அவள் ஒரு காளையோடு காட்டு வழியே போய்க்கொண் டிருந்ததையும், அவர்கள் காதலால் பிணைக்கப்பட்டு மகிழ்ச்சியாக விளங்கி யதையும் வரும் வழியில் சிலர் கண்டார்கள். கண்டவர்கள் ஊருக்கு வந்ததும் கவலைப்படும் தாய்மார்க்குத் தெரியப்படுத்தினார்கள்.

தாய்மார்க்கு ஒரு வகையில் கவலை தீர்ந்தது ; விரும்பிய காதலனோடு மகிழ்ச்சியாகப் போய்க் கொண்டிருக்கின்றாள் என்று கேள்வியுற்றதால் ஒரு வகையில் ஆறுதல் பிறந்தது. ஆயினும் பெற்ற மனம், வளர்த்த மனம், பித்து அல்லவா ?

"அவன் உண்மையான காதலனாக இருக்க லாம். ஆனால், செல்வ வளம் இல்லாதவனாக இருந்தால் அருமை மகள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? இவள் எப்படி அவனை நம்பினாள்? ஒருகால், அவன் பல பொய் சொல்லி இவளை ஏமாற்றிவிட்டிருப்பான். அந்தப் பொய்ம்மொழிகளை இவள் நம்பிவிட்டிருப்பாள். ஆமாம், இவளுக்கு என்ன தெரியும் ? நேற்று வரையில் அறியாக் குழந் தையாக வீட்டில் வளர்ந்த பெண் அல்லவா? மகள் காட்டு வழியில் செல்கிறாளாமே! அங்கே

பசிக்கு உணவு கிடைக்காதே ! குடிக்க நீர்கிடைப்பதும் அருமையாயிற்றே! அங்கே மகள் என்ன செய்வாள் ? தேனும் பாலும் கலந்து உண்பதற்கும் அவளை வேண்டி வேண்டி ஊட்டவேண்டுமே ! வற்புறுத்தி ஊட்டினல் அழுது விம்முவாளே ! அந்த வழியும் பொல்லாத வழி ஆயிற்றே ! கொடிய விலங்குகளும் திரியுமே ! இவளோ பயம் மிகுந்த இளம் பெண். அங்கே என்ன செய்வாள் ? வயலைக்கொடியைப் பசு மேய வந்தபோது பந்தும் பொம்மையும் விட்டுவிட்டு அலறி ஓடி வந்தவள் அல்லவா ? இப்போது என்ன செய்வாள் ? ஐயோ! நேற்றுவரையில் அவள் இங்கே இப்படித்தானே இருந்துவந்தாள் ; இன்று எப்படிக் கொடிய வழியில் மகிழ்ச்சியோடு போகத் துணிந்தாள் ?' என்று வளர்த்த தாயின் மனம் கவலைப்பட்டது.

மகளுடைய வளர்ச்சி மற்றவர்களுக்குத் தெரியலாம் ; ஆனல் பெற்ற தாய்க்கும் வளர்த்த தாய்க்கும் தெரிவது அருமையே. அவர்களுக்கு வளர்ந்த பிறகும் மகள் சிறு குழந்தைதான் ; காதலியான பிறகும் சிறு குழந்தைதான் ; காட்டு வழியில் செல்லத் துணிந்த பிறகும் சிறு குழந்தைதான். பெற்று வளர்த்த மனம் அவ்வாறுதான் எண்ணும். அதனல்தான் இன்னும் பசுவுக்குப் பயந்து அலறி ஓடிய நிகழ்ச்சியும் தாயின் நினைவை விட்டு நீங்கவில்லை ; தேனும் பாலும் உண்ண வற்புறுத்தினல் விம்மி அழும் தன்மையும் நினைவை விட்டு நீங்கவில்லை ; காட்டு வழியில் காதலனேடு மகிழ்ச்சி

யாகச் செல்வதைக் கண்டவர்கள் வந்து சொன்ன பிறகும் கவலை தீரவில்லை.

*இல்லெழு வயலை ஈற்ரு தின்றெனப்*
*பந்துநிலத் தெறிந்து பாவை நீக்கி*
*அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்*
*மான்அமர்ப்பு அன்ன மையல் நோக்கமொடு*
*யானும் தாயும் மடுப்பத் தேனெடு*
*தீம்பால் உண்ணுள் வீங்குவனள் விம்மி*
*நெருநலும் அனையள் மன்னே; இன்றே*
*மையணல் காளை பொய்புகல் ஆக*
*அருஞ்சுரம் இறந்தனள் என்பதன்*
*முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறந்தே.*

—நற்றிணை - 179.

[*ஈற்ரு - கன்று ஈன்ற பசு. நெருநல் - நேற்று.*]

---

# 5. தாய் மனம்

காக்கை உட்கார்ந்தது; பனைமரத்திலிருந்து ஒரு பனம்பழம் விழுந்தது. இந்தக் காட்சியைக் கண்டவன், "காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது" என்ருன். அவன் சொன்னதைக் கேட்டவன், "அந்தக் காக்கை உட்கார்ந்ததே பனம்பழம் விழுந்ததற்குக் காரணம்" என்று தவருக எண்ணவும் கூடும். இவ்வாறு எதிர் பாராத நிகழ்ச்சிகளைக் காரண காரியமாக்கித் தொடர்பு படுத்திக் கூறக் கூடாது என்பது பெரியோர் கருத்து.

காக்கை அந்த மரத்தில் எத்தனையோ முறை உட்காந்திருக்கின்றது. அப்போதெல்லாம் பனம் பழம் விழுந்திடவில்லை. பனம்பழம் பழுத்துப் பழுத்து எத்தனையோ முறை விழுந்திருக்கின்றது. அப்போதெல்லாம் காக்கை அந்த மரத்தில் உட்கார்ந்ததுமில்லை. இவ்வாறு ஆராய்ந்துதான் காரண காரிய உண்மையைத் தெளியவேண்டும்.

காக்கை வீட்டின் முற்றத்திலோ கூரையிலோ உட்கார்ந்து எத்தனையோ முறை கரைந்தது உண்டு. அப்போதெல்லாம் விருந்தினர் வந்து கொண்டிருக்கவுமில்லை. விருந்தினர் எத்தனையோ நாள் வீட்டிற்கு வந்தது உண்டு; அந்த நாட்களி லெல்லாம் காக்கை தவருமல் கரையவுமில்லை. ஆனல், சில நாளில் காக்கை கரைந்தபின் விருந்தி னர் வருவதும் உண்டு. அதனல், காக்கை கரைந் தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது. இது காரண காரியத் தொடர்பற்ற நம்பிக்கை ஆகையால், மூடநம்பிக்கை என்று கூறப்படும்.

அறிவு கலங்காத நிலையில் ஆராய்ச்சிக்கு இடம் உண்டு. அப்போது மூடநம்பிக்கைகள் வாழ்க்கையில் புகுவதே இல்லை. ஆனல், துன்ப வெள்ளம் அலைத்து வந்து புரட்டும் வாழ்க்கையில் அறிவு கலங்காமலிருப்பது எல்லோராலும் இய லாது. பெரும்பாலோர் கவலை தொடங்கியபோதே கலங்கிவிடுவார்கள். அவர்களுக்கு அந்த நிலையில் ஆராய்ச்சி செய்யும் ஆற்றல் இல்லை. வெள்ளத்தில்

அகப்பட்டுக் கரை காணுது தத்தளிக்கின்றவன் துரும்பையும் தோணி எனப் பற்றி அமிழ்வதுபோல் கவலையால் மெலிந்தவர் மூடநம்பிக்கையைக் கடைப்பிடித்து ஆறுதல்பெற முயல்வர். இவ்வாறு தான் மூடநம்பிக்கைகள் பொதுமக்களின் வாழ்க்கையில் இடம் பெற்று வேரூன்றிவிட்டன. மக்களின் வாழ்க்கையில் கவலையும் தொல்லையும் குறைந்து அஞ்சாமையும் அறிவும் மிகுந்தால் தான் மூடநம்பிக்கைகள் ஒழியும். அதுவரையில் ஆயிரம் ஆயிரமாகப் புத்தர்களும் திருவள்ளுவர்களும் பிறந்தாலும், கோடிக்கணக்கான சீர்திருத்த இயக்கங்கள் தலையெடுத்தாலும், மூடநம்பிகைகள் அழியாமல் இருந்துவரும்.

மக்களின் வாழ்க்கையில் கவலையும் துன்பமும் சங்க காலம் முதல் இன்று வரையில் ஏறக்குறைய ஒரே வகையாக இருந்துவருகின்றன. ஆகையால் இன்று உள்ள மூடநம்பிக்கைகளில் சில புதியன வாய்ப் புகுந்திருந்தாலும் பல பழையனவே ஆகும். அவற்றுள் காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பது ஒன்ருகும். இன்றும் காக்கை கரைந்தால் "யாரோ விருந்தாளி வரப் போகிருர்" என்று தமிழ் மக்கள் பேசிக்கொள்வது உண்டு. அன்றும் அந்த வழக்கம் இருந்தது.

ஒரு குடும்பத்தில் உற்ற வயது அடைந்த பெண் காதல்வாழ்க்கை தொடங்கிக் களவொழுக்கத்தில் சில காலம் கழித்தாள். பெற்ரோர் அறிந்தால் கடிவார்கள் என்ற அச்சமும், ஊரார் அறிந்

தால் அலர் தூற்றுவார்கள் என்ற கவலேயும் விடா மல் வருத்திவந்தன. இவற்றிற்கு ஒரு முடிவு தேடித் தன் காதல் வாழ்வை வளம்பெறச் செய்து கொள்ள வழிகளே நாடினுள். அவள்முயற்சிக்கு ஆருயிர்த் தோழியாகப் பழகிய மற்ருெருத்தி துணே யாகவும் இருந்தாள். ஊரார் அறிந்து தூற்றவும் தொடங்கினுர்கள். பெற்ருேர் அறிந்து கடியவும் தொடங்கிவிட்டார்கள், நிலேமை நெருக்கடியாகி விட்டது தோழியின் அறிவுரை கொண்டு துணிந் தாள். துணிந்தவாறு நள்ளிரவில் வீட்டை விட்டுக் காதலனேடு வேற்றூர்க்குச் செல்லப் புறப்பட் டாள்.

பொழுது விடிந்ததும், அருமை மகளேக் காணுமல் பெற்ருேர் கலங்கினுர்கள்; அலேந்தார் கள். எங்கும் தேடினுர்கள். மெல்ல மெல்லத் தோழி வாயிலாகச் சில உண்மைகள் அறிந்தார் கள்; வழியில் செல்லும்போது அவளேயும் அவனேயும் கண்டதாகக் கூறிய சிலருடைய சொற் களால் சிறிது அமைதியும் பெற்ருர்கள்.

ஆனுலும் பெற்ற மனம் பித்து அல்லவா? தந்தையைவிடத் தாய் நெக்குருகும் நெஞ்சினள் அல்லவா? கவலேயால் கரைந்து வாடி வீட்டி னுள்ளே ஒரு தூணேச் சார்ந்திருந்தாள். அப்போது அங்கே காக்கை ஒன்று வந்து "கா கா கா" எனக் கரைந்தது. கவலேவெள்ளத்துள் மூழ்கி யிருந்த அவள் நெஞ்சம் மலர்ந்தது. "அருமைமகள் அந்தக் காட்டு வழியில் எவ்வாறு நடந்து செல்ல

முடியும்? அவளுடைய அருமை அறிந்து பசியும் நீர்வேட்கையும் தீர்ப்பவர் யார்? அவளுடைய மென்மையை உணர்ந்து அவளைப் பாராட்டிப் போற்றுபவர் யார்? அய்யோ! மகளே" என்று எண்ணி நெகிழ்ந்து உருகிய அவள்நெஞ்சம் காக்கையின் குரலைக்கேட்ட அளவில் ஒருவகை ஆறுதல் பெற்றது. ஏன்? காக்கை கரைந்தால் விருந்து வரும் அல்லவா? அந்த விருந்தினர் யார்? தன் மகளை அழைத்துச் சென்ற மருமகனே வந்தாலும் வரலாம் அல்லவா? இந்த எண்ணமே அவளுடைய துயரத்திற்கு அருமருந்தாயிற்று.

தன் கவலை தீர்க்கும் மருந்து—இத்தகைய அருமருந்து அந்தக் காக்கையின் குரலில் இருப்பதை அவள் உணர்ந்தாள். அந்தக் காக்கையை அன்போடு நோக்கினுள். நம் வாழ்வுக்கு நல்லுதவி ஆற்றும் ஒருவரை நாம் அன்போடு பார்க்கும் போது அவரிடம் உள்ள குற்றம்குறை யெல்லாம் மறைந்து அழகும் அருங்குணமுமே மேம்பட்டுத் தோன்றும். இது இயற்கை. அந்தத் தாயும் காக்கையை அன்போடும் ஆவலோடும் பார்த்த போது, அதன் அழகு தெளிவாகப் புலப்பட்டது. காக்கையின் தூவி—சிறகு—அவள் கண்ணிற்கு மாசற்ற தூவியாக விளங்கியது.

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை!" என்று அந்தக் காக்கையை விளித்தாள்.

"காக்கையே! உனக்கு நல்ல ஊன் கலந்த உணவு தருவேன். எனக்கு நீ ஒரு நல்லுதவி

செய்யவேண்டும். அதாவது : என் மகள் தன் காதலனேடு திரும்பி இந்த வீட்டிற்கு வருவதாக நீ கரைய வேண்டும். நீ கரைந்தால் விருந்தினர் வருவார் அல்லவா? அவர்கள் வருவதாக நீ கரைய வேண்டும்" என்று இதைத்தான் அந்தக் காக்கைக்குச் சொல்லத் தொடங்கினுள்.

அவள்கண் அந்தக் காக்கையின் அழகிய தூவியைக் கண்டது போலவே, அவள்மனம் அதன் அருங்குணத்தையும் எண்ணியது. காக்கையின் அருங்குணம் என்ன? அது தனியே உண்ணுது ; உறவு கலந்தே உண்ணும். ஒரு சிறு முறுக்குத் துண்டைக் கண்டாலும், "கா கா கா" என்று தன் இனத்தை யெல்லாம் கூவியழைத்தே உண்ணும். அறத்தை அளந்து கண்டு அறநூல் இயற்றிய திருவள்ளுவரும், கடவுள்நிலையை உள்ள வாறு உணர்ந்து உருகிப் பாடிய தாயுமானவரும் தெளியுமாறு வாழும் வாழ்க்கை அல்லவா காக்கையின் வாழ்க்கை!

காக்கையின் உதவியை எண்ணிய தாய், அந்த ஒரு காக்கைக்கு மட்டும் உணவு தருவது கைம்மாறு ஆகாது என உணர்ந்தாள். தன் கவலை தீர்க்கும் காக்கைக்கு கைம்மாறு செய்வதனுல், அதன் சுற்றமெல்லாம் கூவி அழைத்து உண்ணுமாறு நிறையத் தரவேண்டும் என எண்ணினுள்.

*மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை !*
*அன்புடை மரபின்நின் கிளையோடு ஆர...*
*தருகுவென்...*

என்ருள்.

விருந்தாளி வீட்டிற்கு வந்தால் நாம் விரும்பும் உணவை அவர்க்கு உதவுவதால் பயன் இல்லை. அவர் விரும்பும் உணவையே அவர் உண்ணுமாறு செய்ய வேண்டும். அதனை நன்கு உணர்ந்தவள் அந்தத் தாய்; பலர்க்கு விருந்து அளித்து, விருந்தோம்பும் நல்லறம் நடத்திப் பண் பட்டவள். ஆகையால், காக்கை விரும்பும் உணவை அறிந்து அதனையே தருவதாகக் கூறினுள். ஆனால், அதே நிலையில், காக்கையை ஒரு சிறு பறவையாக நினைத்து இழிவாக நடத்தவும் அவள் துணியவில்லை. தன் உற்ருரும் மற்ருேரும் செய்ய முடியாத அரிய உதவியை அந்தக் காக்கை செய்யக் கூடும் என்று நம்பினுள் அல்லவா? அவர் களால் தன் மகளை மீட்டுத்தர முடியாதபோது, அந்தக் காக்கையின் குரல் அவர்களை வீட்டிற்கு வருவிப்பதாக நம்பினுள் அல்லவா? ஆகையால், மக்களுள் சிறந்தவர் ஒருவர் விருந்தினராக வீட்டிற்குள் வந்தால் அவர்க்குப் பொன் தட்டில்— வேலைப்பாடு அமைந்த அழகிய தட்டில்—உணவு அமைப்பது இயல்பு அல்லவா? அந்த முறைப்படி காக்கையை ஒரு பறவை எனக் கருதிவிடாமல்— ஆனால் அதே நிலையில் அதன் விருப்பமான உணவை மறக்காமல்—வேலைப்பாடு அமைந்த

அழகிய பொன் தட்டில் ஊன் உணவு தருவ தாகக் கூறினள்.

*மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை !*
*அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்*
*பச்சூன் பெய்த பைந்நிண வல்சி*
*பொலம்புனை கலத்தின் தருகுவென் மாதோ*

என்ருள்.

இவ்வளவும் கூறியபின் தன் வேண்டு கோளைத் தெரிவிக்க வேண்டும் அல்லவா ? தன் அருமை மகள் திரும்பிவர வேண்டும் என்பதே அவள் கவலை. ஆனல் காக்கை தனியே உண்ணு மல் இனத்தைக் கூவி அழைத்தே உண்ணும் என்று அதன் அரும் பண்பை உணர்ந்தவள், தன் மகளின் அரும் பண்பை மறந்துவிடுவாளோ ? முன்னமே அறிந்துள்ளவை கொண்டும், அன்று காலை முதல் கேட்டறிந்தவை கொண்டும் தன் மகள் உண்மை யான காதல் வாழ்க்கையில் ஈடுபட்டவள் என்ப தைத் தெளிவாக உணர்ந்தாள். அந்தத் தாயும் காதல் வாழ்க்கையில் ஈடுபட்டு வெற்றி பெற்ற அனுபவம் உடையவள் அல்லவா? அந்த அனுபவம் கொண்டு அவள் தன் மகளுடைய உள்ளத்தை அளந்து பார்த்துத் தெளிந்தாள். தன் மகள் இன்னும் மகளாகவே இராமல் மற்ருெருவனுக்குத் துணைவி ஆகிவிட்டதை— காதலி ஆகிவிட்டதை — அறிந்துகொண்டதால், அவள் தனியே வரமாட் டாள் எனத் தெளிந்தாள். காதலனை விட்டுத்

தனியே அவளைப் பிரிக்க முடியாது என்று உறுதி யாக உணர்ந்தாள்.

*.........காளையொடு*
*அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே*

என வேண்டினாள்.

"அந்தக் காளையோடு திரும்பி வரட்டும்; நாங்கள் அவளோடு அவனையும் வரவேற்போம். காக்கையே! இருவரும் வருமாறு கரைக" என்றாள். அந்தக் காதலனை—தன் மருமகனை—காளை என்று குறிப்பிட்டபோது அவனைப் பற்றிக் கேட்டறிந்த வீரக் குறிப்பை உணர்த்தினாள். அவன் வீரமும் மானமும் குறைந்தவனாக இருந்திருந்தால், தாழ்ந்து பணிந்து பெண் வேண்டியிருப்பான் அல் லவா? அவ்வாறு பணியாமல் உடனழைத்துச் சென்றது அவனுடைய ஆண்மைச் சிறப்பாக அவளுக்குத் தோன்றியது. அதனால் அவனை "வெஞ்சின விறல் வேல் காளை" என்று பாராட்டி னாள். அவன் பெருமிதத்தோடு வேல் ஏந்திக் காட்டு வழியே செல்வதாக வழியில் கண்டவரும் அவ ளுக்குக் கூறினார்கள் அல்லவா?

இவ்வளவும் காக்கைக்குக் கூறியவள், "காக் கையே! கரையாய்" என்று ஏவாமல், "கரைக" என்று கூறும் எல்லையையும் கடந்து, "கரைந்தீமே" (கரைந்தருள்வாய்) என்று வேண்டினாள்.

இது ஐங்குறுநூற்றில் ஓதலாந்தையார் பாடிய தாக உள்ள ஒரு பழம் பாட்டு:

*மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை !*
*அன்புடை மரபின்நின் கிளையோடு ஆரப்*
*பச்சூன் பெய்த பைந்நிண வல்சி*
*பொலம்புனை கலத்தின் தருகுவென் மாதோ ;*
*வெஞ்சின விறல்வேல் காளையொடு*
*அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே.*

— ஐங்குறுநூறு - 391

*[மறுஇல்—மாசற்ற. தூவி – சிறகு. கிளை—சுற்றம். நிணம் – கொழுப்பு. வல்சி – உணவு. விறல் – வெற்றி. அம்சில் ஓதி – அழகிய சிலவாக வகுக்கப்பட்ட கூந்தலை யுடையவள்.]*

---

## 6. உரிமையே இன்பம்

சிறைவாழ்வை எல்லாரும் வெறுக்கின்றார்கள். அந்த வாழ்வு வெறுக்கப்படுவதை உணர்ந்துதான், அரசாங்கத்தார் சிறைவாழ்வை ஒருவகைத் தண்டனையாக ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு எல்லாராலும் வெறுக்கப்படுவதற்குக் காரணம் என்ன? விருப்பமான உணவு இல்லாத குறை, உடை இல்லாத குறை, ஏற்ற இடமில்லாத குறை என்றெல்லாம் காரணம் கூறலாம். ஆனால், செல்வாக்கும் செல்வமும் பெற்ற குற்றவாளிகளை அரசாங்கம் தண்டிக்கும்போது உணவு உடை முதலியவற்றில் சிறுகுறையும் இல்லாதபடி செய்து அமைக்கின்றது. அப்போதும் அந்தச் சிறை வாழ்வு வெறுக்கப்படுகின்றது. ஆகையால் அந்த

வெறுப்புக்கு உண்மையான காரணம் வேறு உள்ளது.

அந்த உண்மைக் காரணத்தை அறிவதற்கு முன்னே, அரசாங்கச் சிறைபோலவே வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் அமைந்துள்ள சிறைகளையும் ஆராய வேண்டும். பெர்னார்ட்ஷா முதலான அறிஞர் பலருடைய கருத்தின்படி இந்தக் காலத்தில் வீடுகள் பெரும்பாலும் சிறுவர்களுக்குச் சிறைகளாகவே அமைந்துள்ளன; கல்வி நிலையங்கள் பெரும்பாலும் மாணவர்களுக்குச் சிறைகளாகவே அமைந்துள்ளன; தொழிற்சாலைகள் பெரும்பாலும் ஏழைகளுக்குச் சிறைகளாகவே அமைந்துள்ளன.

அரசாங்கச் சிறை, குற்றத்தைத் தண்டிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மேலே கண்ட மற்றச் சிறைகள் குறையைப் போக்குவதற்காக வற்புறுத்தப்படுகின்ற சிறைகளாகும்.

உணவும் உடையும் பெற வேறு வழி இல்லாத போது, அந்தக் குறையைத் தீர்த்து வாழ்வதற்காகச் சிறுவர்கள் அடக்குமுறைகள் பலவற்றையும் பொறுத்து அடங்கி வாழ்கின்றார்கள். ஓய்வோ விடுதலையோ கிடைத்த போதெல்லாம், வீட்டுச் சிறையை விட்டு வெளியேறி மகிழ்ச்சியோடு தெருவெல்லாம் திரியத் தொடங்குகிறார்கள்; ஊரெல்லாம் சுற்றத் தொடங்குகிறார்கள். எல்லா வீடுகளும் இப்படிப்பட்டவை என்று கூறிவிட முடி

யாது. பெரும்பாலான வீடுகளில் அடக்கு முறையே ஆட்சி புரிகின்றது. அந்தக் கொடுங் கோன்மை நிலேத்துள்ள வீடுகளே கொடிய சிறை கள். மற்ற நல்ல வீடுகளில் பெற்ருேர் அன்பான ஆட்சியால் சிறுவர்களின் உள்ளத்தைப் பிணித்து வாழ்விக்கின்ருர்கள். அப்படிப்பட்ட அன்பான பெற்ருேர் இல்லாத வீடுகள் அடக்குமுறை வாழும் சிறைகளாக மாறுகின்றன. அந்தப் பொல்லாத வீடுகளில் கிடைக்கும் அறுசுவை உண்டியையும் வெறுத்துத் தெருவெல்லாம் திரிந்து ஊரெல்லாம் சுற்றி அலேயும் சிறுவர்களேப் பழிப்பதா ?

அடக்குமுறை வாழும் பள்ளிக்கூடங்களேயும் மாணவர்கள் இவ்வாறே வெறுக்கின்ருர்கள். அந்தப் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று இருப் பிடங்களில் இருந்து அறியும் நாட்களே ஏக்கத் தோடு எண்ணிக் காலங் கழிக்கின்ருர்கள். ஆனுல் அந்தப் பள்ளிக்கூடத்துச்சன்னல்களும் கதவுகளும் மூடிக்கிடக்கும் காட்சியைக் காணத் தவம் கிடக் கின்ருர்கள். கதவுகளேத் திறந்தபின் அடிக்கும் மணியோசையை வெறுத்துக்கொண்டே உள்ளே புகுகின்ருர்கள் ; ஆனுல் கதவுகளே மூடுமுன் அடிக்கும் மணி யோசையை விருப்பத்தோடு கேட்டு மகிழ்ந்துகொண்டே வெளியே வருகின்ருர் கள். எதிர்பாராத விடுமுறைகள் திடீரென்று கிடைக்கும் காலங்களில் அந்த மாணவர்களின் மனம் மகிழ்ந்து துள்ளுகின்றது. அவர்களின் முகமே மகிழ்ச்சி ஒளி வீசி உள்ளத்தை விளக்கு

கின்றது. அப்போதுதான், அடக்குமுறை வாழும் இடம் கல்விநிலையமே ஆனாலும் சிறை போல்வதே என்பதும், சிறைபோல வெறுக்கப்படுவதே என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

தொழிற்சாலைகளில் கொடுங்கோன்மை நிலவுமானால் தொழிலாளர்கள் வருவாய் துறந்து பலநாள் வேலை நிறுத்தம் செய்யவும் துணிகின்றார்கள் அல்லவா? வீட்டில் அரிசி இல்லாமல் மனைவி மக்கள் வாடும் நிலை வரும் என்று அறிந்திருந்தும், வாடும் நிலை வந்த பிறகு அந்தத் துயரக்காட்சியைக் கண்ணாரக் கண்டிருந்தும், வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துகிறார்கள் அல்லவா? அப்போது அவர்களின் உள்ளம் உணர்த்துவது என்ன? தொழிற்சாலை ஒரு சிறைச்சாலையாக மாறுமானால் அதனால் கிடைக்கும் வருவாயும் வாழ்வும் கண்டு அவர்கள் மகிழ்வதில்லை. அந்த வருவாய் பெற்று வாழும் வாழ்வைவிட மனைவி மக்களின் பட்டினியைக் காண்பதே நல்லது என்று துணியும் துணிவைத்தான் உணர்த்துகின்றது. மறுபடியும் அதைத் தொழிற்சாலையாக மாற்றி அமைத்துச் சிறையின் கொடுமை சிறிதும் இல்லாதபடி திருத்தியபிறகே அந்த ஏழைகளின் மனம் அதை நாடுகின்றது. அதுவரையிலும் உறுதியாக இருக்கின்றது அல்லவா?

உணவு தரும் வீடு, கல்வி தரும் பள்ளிக்கூடம், வருவாய் தரும் தொழிற்சாலை இவற்றையும் வெறுக்கும் நிலை உள்ளது என்றால் அடிப்படையான காரணம் என்ன? உரிமை என்னும் ஒன்று இல்லாத

குறையே ஆகும். அறிவு வளராத சிறுவனும் உரிமையை உயிரைவிட மேலாக மதிக்கின்ருன். கல்விபெற முயலும் மாணவனும் உரிமையை விரும்பி நாடுகின்ருன். உரிமை இல்லாதபோது, உரிமை வாழ்விற்கு இடமில்லாதபோது, உணவு, கல்வி, வருவாய் முதலான எவற்றையும் வெறுத்துத்தள்ளும் துணிவு மக்களுக்கு இயல்பாக அமைந்துள்ளது. சிறைவாழ்வில் உரிமை ஏது ? அதனுல்தான் வெறுக்கப்படும் தண்டனையாக அது அமைந்துள்ளது. இந்தச் சிறைகளை நடத்துகின்றவர்களோ நல்ல நோக்கம் உடையவர்களே. அவர்களின் நோக்கத்தில் எள்ளளவும் குறை சொல்ல முடியாது. அவர்களின் முறையே குறையுடையது ; நோக்கம் குறையுடையதன்று.

குற்றவாளிகளைத் திருத்த வேண்டுமென்றே அரசாங்கம் சிறை ஏற்படுத்திக் காக்கின்றது. ஏழைகளுக்கு வருவாய் உதவித் தாங்களும் வாழ வேண்டுமென்றே முதலாளிகள் தொழிற்சாலைகளில் கடுமையைப் புகுத்திக் காக்கின்ருர்கள். மாணவர்களுக்கு அறிவு புகட்டவேண்டுமென்றே கல்வி நிலையத் தலைவர்கள் கடுமையாகக் காக்கின்ருர்கள், சிறுவர்களை வளர்க்க வேண்டுமென்றே பெற்ருேரும் வீடுகளில் கடுமை காட்டிக் காக்கின்ருர்கள். இந்த நல்ல நோக்கம் உரிமையைப் பறிக்குமானுல் வெறுத்துத் தள்ளப்படுகின்றது. எதிர்க்கவும் படுகின்றது, அழிக்கவும் படுகின்றது.

ஆகையால், மக்களின் வாழ்க்கையில் முதல் தேவை உரிமையே. உரிமை இல்லாதபோது

மற்றவை எவ்வளவு அமைந்தாலும் பாழ்படுத்தப் படுகின்றன. போற்றப்படுவதில்லை. உரிமையே இன்ப வாழ்வின் அடிப்படையாகப் போற்றப்படு கின்றது.

இந்த உண்மையைக் கபிலர் என்னும் புலவர் வேறொரு துறையில் எடுத்துக்கூறி விளக்குகின்றார். திருமணம் செய்துகொண்டு வாழும் வயது உற்ற ஒரு மகளைப் பெற்றோர் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் காத்துவந்தார்கள். மகள் ஒழுக்கம் உடையவளாய்ப் பழி அற்றவளாய் வாழவேண்டும் என்பதுதான் பெற்றோரின் நோக்கம். அவள், வாழ்க்கையில் அனுபவப்பட்டுத் தேராத இளம் பெண்; ஆகையால் அவளைப் பொறுப்போடு காத்துவர வேண்டும் என்று அவர்கள் உணர்ந் தார்கள். அந்தக் காரணத்தால் அவள் அடிக்கடி வெளியே சென்று திரியாதபடி தடுத்தார்கள். அவளோடு நெருங்கி உயிர்த்துணையாகப் பழகும் தோழி முதலான சிலருடன் மட்டுமே பழகும்படி பார்த்துக்கொண்டார்கள். சுருங்கக் கூறினால், அருமை மகளின் வாழ்க்கை வீட்டளவில் நின்று சுருங்கும்படியாகச் செய்துவிட்டார்கள். உரிமை உணர்வு இந்தக் கட்டுப்பாட்டை வெறுக்கத் தலைப் பட்டது. அன்பு மிகுந்த பெற்றோரின் செயலை அவளுடைய மனம் வெறுக்கத் துணிந்தது. வளம் மிகுந்த வீட்டு வாழ்வைச் சிறையாக உணரவும் தொடங்கிவிட்டது.

வீட்டிற்கு வெளியே பழகும் பழக்கம் குறைந்ததே தவிர, பெற்ருேருடைய அன்பும் உதவியும் குறையவில்லை. செல்வ மகளாக வளர்ந்த அவளை வழக்கம் போல் தோழியோடு தோட்டத்திற்குச் சென்று கவலையில்லாமல் விளையாடி மகிழச் செய்தார்கள். அங்கே விளையாடும் களைப்புத் தீர இனிய பாலும் தேனும் கலந்து பருகச் செய்தார்கள். ஆனால், மகளுடைய மனம் இவற்றை விரும்பியதா ? இல்லை. உரிமை அற்ற வாழ்வில் அமிழ்தமே கிடைத்தாலும் போற்ற மனம் வருமா ? தன் உள்ளத்தின் உள்ளே இந்தத் தோட்டத்தை அவள் வெறுத்தேவந்தாள் ; தேனும் பாலும் கலந்து குடிப்பதையும் அவள் வெறுத்தேவந்தாள். அந்த வெறுப்பை எவரும் அறிய முடியவில்லை. தன் உயிர்த்துணையான தோழிக்கும் அவள் அறிவிக்கவில்லை. அறிவிப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்த போது தான் அறிவித்தாள்.

பெற்ருேரின் கட்டுப்பாட்டிற்காக வீட்டில் அடங்கிக் கிடக்கும் மகளின் வாழ்வை இற்செறிப்பு என்று பழைய நூல்கள் குறிக்கும். அந்த இற்செறிப்பில் அவளுடைய உரிமை வேட்கை குறையவில்லை ; கட்டுப்பாட்டை மீறிச் செல்லவே தொடங்கியது. தனக்கு உரிய காதலனை நாடிய அவள் உள்ளம் அந்தக் காதலனை மறக்கவில்லை. அடக்குமுறை ஒரு வகையில் அந்தக் காதல் என்னும் பயிரைச் செழிப்பாக வளர்த்துவந்தது.

பலநாள் எண்ணம் ஒருநாள் துணிந்த செயலாக மாறிவிட்டது. பெற்ருேர் அறியாமல் ஒருநாள் இரவில் வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தலைவனேடு வெளியூர்க்குச் சென்றுவிட்டாள். சில நாள் அங்கே இருந்த பிறகு, திரும்பி வர நேர்ந்தது. தனியே வரவில்லை. தன் காதலனேடுதான் வந்தாள். காதலனேடு வரும் உரிமை இல்லையானல், அந்த வீட்டை அவள் மறுபடியும் நாடியிருக்க மாட்டாள்.

திரும்பி வந்தபோது தோழி ஒரு கேள்வி கேட்டாள். "நீயும் அவரும் போயிருந்தீர்களே, அந்த நாட்டில் நல்ல தண்ணீர் கிடைப்பதே அருமை என்று சொல்கின்ருர்களே; குடிக்கத் தண்ணீர் கிடைக்காத ஊரில் எப்படிக் காலங் கழித்தாய்? நல்ல தண்ணீரே இல்லையாமே?" என்ருள்.

இப்போது நல்ல வாய்ப்புக் கிடைத்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவள் தன் உள்ளக் கருத்தை வெளியிட்டாள். "தோழி! உண்மைதான். அந்த நாட்டில் தண்ணீருக்குப் பஞ்சம்தான். எங்கோ ஓர் இடத்தில் சிறிது தண்ணீர் கிடைக்கும். அந்த நீரையும் சருகுகள் விழுந்து கெடுத்திருக்கும். அந்த நீரும் மக்களுக்குக் கிடைப்பதில்லை. மான்கள் வந்து குடித்துவிட்டுப் போன மீதியே மக்களுக்குக் கிடைக்கும். அதுவும் கலங்கலாக இருக்கும். ஆனலும் அந்த நீரைத் தான் என் மனம் விரும்பியது. அந்த நீர்தான்

என் நாக்கிற்கும் இனியதாக இருந்தது. செல்வ மகளாக வளர்ந்து நம் வீட்டுத் தோட்டத்தில் பெற்றுவந்த தேன் கலந்த பாலும் அதுபோல் எனக்கு இனிக்கவில்லை" என்றாள்.

உண்மையாகவே தேன் கலந்த பால் சுவை மிகுந்தது; அதன் இனிமையே தனிச் சிறப்பு உடையது. ஆனாலும், உள்ளம் இன்புறுவது உரிமை வாழ்வில்தான். உரிமை இல்லாத வாழ்வில் இன்பம் ஏது ?

உரிமை இல்லாதபோது தேனுக்கும் பாலுக்கும் இனிமை ஏது ?

*அன்னாய் வாழிவேண்டு அன்னைநம் படப்பைத்*
*தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு*
*உவலைக் கூவற் கீழ*
*மானுண்டு எஞ்சிய கலிழி நீரே.*

—ஐங்குறுநூறு - 203

---

# 7. அவள் வேண்டுகோள்

இல்வாழ்க்கை என்றால் கணவனும் மனைவியும் வாழ்ந்து வயிறு வளர்ப்பது மட்டும் அல்ல. வயிற்றுப் போராட்டமே மக்களினத்தை அலைத்து வரும் இந்நாளில் இல்வாழ்க்கை இவ்வளவுதான் என்று தோன்றுகின்றது. ஆனால், பண்டைத் தமிழ்நாட்டில் வயிற்றுப் போராட்டம் இவ்வளவு

கொடுமையாக இல்லாத நாளில் இல்வாழ்க் கையின் நோக்கம் சிறந்ததாக இருந்தது. பிறர்க்கு உதவியாக வாழ்ந்து குடும்பம் நடத்துவதே இல்வாழ்க்கையாகப் பழந்தமிழர் எண்ணினர். ஆகையால் இந்த நோக்கம் அறிந்த குடும்பத் தலைவர் பொருள் தேடிக் குவித்து விருந்தினரை ஓம்புவதைக் கடமையாகக் கொண்டனர்.

*இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்*
*வேளாண்மை செய்தற் பொருட்டு [தோம்பி*

எனத் திருவள்ளுவர் இந்தக் கடமையைத் தெளிவு படுத்தியுள்ளார்.

இவ்வாறு விருந்தோம்பும் வாழ்க்கை நடத்து வதற்கு வேண்டிய பொருள் ஒரு குடும்பத்தில் குறைந்துவிட்டது. ஆகையால், பொருள் தேட வேண்டும் என்று துணிந்தான் குடும்பத் தலைவன். அக்காலத்தில், பொருள்தேட முனைந்தவர், தமிழ் நாட்டை விட்டு வடநாட்டுக்குச் சென்று வாணிகம் முதலியன நடத்திப் பொருள் திரட்டிய பிறகு தம் ஊருக்குத் திரும்பி வருவது வழக்கம். செல்வம் வேண்டுமானால் கடல் கடந்து சென்று சேர்க்க வேண்டும் என்ற கருத்து 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற பழமொழியாக ஏற்பட்டது இந்த வழக்கத்தால் தான்.

இந்தக் குடும்பத் தலைவன் கடல்கடந்து போக எண்ணவில்லை, மலைகடந்து பாலைவனத்தின் வழி யாகப் போகத் துணிந்தான். அந்தக் கொடிய

வழியில் உள்ள இடர் எல்லாம் அவனுக்குத் தெரிந்தவைகளே. அந்த வழியில் தான் மட்டுமே செல்லத் துணிந்தான். மெல்லியளாகிய தன் மனைவியை அந்தக் கொடிய வழியில் அழைத்துப் போக அவனுக்கு மனம் இல்லை; அதைப் பற்றி எண்ணவும் அஞ்சினான். எப்படியாவது அவளைத் தன்னுடன் வராமல் தடுக்க வேண்டும் என்று அந்தப் பாலைவழியின் கொடுமையை எடுத்துரைத் தான்.

"அந்தக் கொடிய வழியில் பொல்லாதவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொலை என்பது ஒரு விளையாட்டு. கொலைக்கு அஞ்சாத அவர்கள், வழிப்போக்கருக்கு எந்த வகைத் துன்பமும் செய் வார்கள். அவர்களின் மனம் போலவே, அந்த நிலமும் வறண்டு தீய்ந்துபோயிருக்கின்றது. அவர் களின் நெஞ்சில் ஈரம் இல்லாதது போலவே, அந்த நிலத்திலும் நீர் இல்லை. மழை இல்லாமையே காரணம். மழை இல்லாமையால் மான்களுக்கும் உணவு அற்றுப் போய்விட்டது. வேறொன்றும் கிடைக்காமையால், அந்த மான்கள் மரல் பழத் தைத் தின்று உயிருடன் இருக்கின்றன. அந்த அளவிலாவது உயிர் தாங்க மக்களுக்கு இட முண்டா என்றால் அதுதான் இல்லை. அவர்கள் ஆறலைகள்வரின் அம்புக்கு இலக்காக வேண்டி யுள்ளது. மரண வேதனைப்பட்டு வாடும் நிலையிலும் புலர்ந்து வறண்ட நாவிற்கு நீர் கிடைப்பதில்லை. தண்ணீர் பெறாமல் தடுமாறும் துயரம் பொறுக்கவே

முடியாது. அந்தத் துயரத்தை ஒருவாறு போக்குவது ஒன்று உண்டென்ருல், அதுதான் துன்பத்தால் விடும் கண்ணீர்! அந்தக் கண்ணீரே வறட்சியான நாவை நனைக்கும். இத்தகைய காட்டு வழியில் உன்னைப் போன்ற மெல்லியல் வரலாகாது.”

***மரையா மரல்கவர மாரி வறப்ப***
***வரையோங்(கு) அருஞ்சுரத்(து) ஆரிடைச் செல்வோர்***
***சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்***
***உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்***
***தண்ணீர் பெருதஅத் தடுமாற்(று) அருந்துயரம்***
***கண்ணீர் நனைக்கும் காடு.***

என்ருன்.

இதைக் கேட்ட தலைவி வாழ்வின் உரிமையும் கடமையும் நன்கு உணர்ந்தவள்; இன்பம் துன்பம் என்பவற்றின் உண்மை இயல்புகளைத் தெளிய அறிந்தவள்; புறத்தே உள்ள பொருள்களைவிட அகத்தே உணரும் உணர்வு நிலைகளே இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்பதை விளங்கக் கண்டவள். அந்தப் பாலை வழியும், அதன் வறண்ட நிலையும், வழிப்போக்கர் படும் அல்லலும் அவளுக்குத் துன்பமாகத் தோன்றவில்லை. கணவனைக் கொடிய வழியில் அனுப்பிவிட்டுத் தான் மட்டும் இனிய வீட்டிலிருந்து வாழும் வாழ்வே அவளுக்குத் துன்பமாகத் தெரிந்தது.

“ அன்பரே! என் மன நிலை அறியாமல் என்னென்னவோ சொன்னீர்! பல்லாண்டு என்னேடு

பழகியும் நீர் இவ்வாறு கூறுவது தகுமோ ? வாழ்க்கையில் எது நீங்கினுலும் நீங்கட்டும். எனக்கும் உமக்கும் இடையே உள்ள அன்புமட்டும் நீங்கக் கூடாது. அந்த அன்பு கெடுமாறு எண்ண வேண்டா. அந்தப் பாலை வழியில் நேரும் துன்பத்திற்கு யான் துணையாக வர வேண்டும்; அதுவே யான் விரும்பும் இன்பம்'' என்று தன் கணவனிடம் கூறினுள்.

*என்நீர் அறியாதீர் போல இவைகூறல்*
*நின்நீர அல்ல நெடுந்தகாய் ! எம்மையும்*
*அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு*
*துன்பம் துணையாக நாடின் அதுஅல்லது*
*இன்பமும் உண்டோ எமக்கு.*

*— கலித்தொகை–6*

இந்த வேண்டுகோள் அவன்முயற்சிக்கு அப்போது முட்டுக்கட்டையானது.

## 8. மறவா ஓவியம்

உலகத்தை அடக்கி ஆள்வது எளிமை; உள்ளத்தை அடக்கி ஆள்வது அருமை. இது அரசியல் தலைவர்களின் வாழ்க்கையால் அறிந்த உண்மை. உலகத்தின் பரப்பைக் கண்டு அறிவது எளிமை. உள்ளத்தின் பரப்பை அளந்து அறிவது அருமை. இது அறிவியல் தலைவர்களிடம் உணர்ந்த உண்மை.

உலகத்தை எழுதிக் காட்டுவது எளிமை; உள்ளத்தை எழுதிக் காட்டுவதே அருமை. இது கவிஞர்களிடம் கண்டு தெளிந்த உண்மையாகும்.

காதலர் என்ற சிறந்த நிலையில் வாழும் கணவன் — மனைவி வாழ்க்கையை எத்தனையோ புலவர்கள் எழுதிக் காட்டியிருக்கின்றார்கள். தலைவன் வீட்டில் இருந்து வாழும்போது மகிழ்ச்சி நிலவுவதும், அவன் தலைவியைப் பிரிந்து வெளியூரில் கடமையை மேற்கொண்டபோது, அந்த வீட்டில் மகிழ்ச்சி குன்றுவதும் இயற்கை. ஒன்றுபட்டு வாழ்வது இன்பம்: பிரிந்து வாழ்வது துன்பம். இவற்றைப் பழந்தமிழ் நூல்கள் சிறப்பாக விளக்குகின்றன.

தலைவனோடு இருந்து வாழும் மகிழ்ச்சியையும் பிரிந்து வருந்தும் துயரத்தையும் நன்றாக உணர்கின்றவள் தலைவியே. தலைவனுடைய மனத்தை உலகக் கடமைகள் ஈர்த்து ஈர்த்து மாற்றுகின்றன. உள்ளூரில் இருந்து வாழும்போது தலைவன் பல கடமைகளை மேற்கொள்ள வேண்டி நேர்கின்றது; வெளியூரில் பிரிந்து வாழும் போதும், தலைவன் மேற்கொண்ட கடமையை நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது. அதனால், அவன் இன்ப துன்பங்களை நுகர்ந்தாலும், அவனுடைய மனம் அவற்றில் நிலைத்துவிடுவதில்லை.

ஆனால், தலைவியின் வாழ்க்கை வேறு. அவளுடைய மனம் தலைவனுடைய அன்பையே சுற்றிச் சுற்றிச் சுழல்கின்றது. அவளுடைய கடமை அவன்

மனத்தை வாழ்விப்பதே. அவளுடைய வாழ்க்கையின் நோக்கம் அவனுடைய அன்புக்கு ஆளாவதே ஆகும். ஆகையால், அவளுடைய மனத்தை மாற்ற உலகத்தால் முடிவதில்லை; உற்றாரால் முடிவதில்லை; பெற்றோரால் முடிவதில்லை; உறு துணையாகப் பழகும் அருமைத் தோழியாலும் முடிவதில்லை. தலைவன் ஒருவனால் தான் முடியும். இன்ப துன்பங்களின் எல்லையைக் காணும் மனநிலை தலைவனுக்கும் உண்டு; தலைவிக்கும் உண்டு. ஆனால், அந்த எல்லைகளில் தலைவன் மனம் நிலை பெறுவதில்லை; தலைவியின் மனமோ நிலைக்கின்றது. காரணம் இதுதான்: தலைவன் மனத்தில் உலகமும் இடம்பெறும்; தலைவியும் இடம்பெறுவாள். ஆனால், தலைவியின் மனத்தில் உலகத்திற்கு இடம் இல்லை; தலைவனுக்கே இடம் உண்டு.

இத்தகைய தலைவியைப் பழந் தமிழ்ப் பாடல்களில் காண்கின்றோம். அவளுடைய மனநிலையைப் புலவர்கள் விளக்கியிருக்கின்றார்கள். தலைவனோடு இருந்து மகிழும் மகிழ்ச்சியைச் சில பாடல்களில் பாடியிருக்கின்றார்கள். தலைவனைப் பிரிந்து வருந்தும் துன்பத்தை மிகப் பல பாடல்களில் பாடியிருக்கின்றார்கள். இரு நிலையையும் ஒப்பிட்டுப் பாடிய பாட்டுக்களும் சில உண்டு. அவற்றுள் ஒரு பாட்டு மிக்க சிறப்பு உடையதாய் உள்ளத்தைக் கவர்கின்றது.

தலைவி தன் அருமைக் காதலனைப் பிரிந்து வருந்திக்கொண்டிருந்தாள். அவளுடைய ஆற்று

மையை உணர்ந்தாள் தோழி. நெடுங்காலமாக அவளோடு பழகி அவளுடைய இன்ப துன்பத்தை உள்ளவாறு உணர்ந்து உற்ற துணையாக இருந்தவள் அந்தத் தோழிதான். தலைவன் பிரியாதிருந்த போது தலைவி மகிழ்ச்சியோடு வாழ்ந்த வாழ்வும் அவளுக்குத் தெரியும். தலைவன் பிரிந்து சென்ற பின், தலைவி கலங்கி வருந்திய வருத்தமும் அவளுக்குத் தெரியும். ஆனாலும், தலைவியிடம் ஏதாவது பேசி அவளுக்கு ஆறுதல் உண்டாக்க வேண்டும் என்று தோழி எண்ணினாள். அந்த எண்ணத்தோடு ஒருமுறை தலைவியை நெருங்கிச் சென்றாள். அவளிடமிருந்து கவலையின் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று செல்லவில்லை. ஏதாவது பேசி அவளுடைய மனத்தைத் தேற்ற வேண்டும் என்றுதான் சென்றாள். சென்றதும் அவளுடைய துயரை உணர்ந்து வருந்தி நின்றாள்.

தோழியின் கவலையை உணர்ந்தாள் தலைவி. "நமக்காக இந்தத் தோழியும் வருந்த வேண்டுமா?" என்று தன்னை நொந்துகொண்டாள். தன் மன நிலையை உள்ளவாறு தோழிக்கு வெளிப்படுத்துவது கடமை என்று உணர்ந்தாள்.

"அருமைத் தோழி! நீ எனக்காகக் கவலைப்பட வேண்டாம். என் வருத்தம் எதனாலும் எவராலும் தீராது. தலைவர் அருகே உள்ளபோது பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவர் பிரிந்து சென்றபிறகு பெருந் துன்பம் அடைகின்றேன். இதன் காரணத்தை வேறு என்ன என்று சொல்வது?" என்றாள்.

இவ்வாறு கருத்தைமட்டும் சொல்லி விளக்க முடியும் என்று அவள் அமையவில்லை. தலைவர் அருகே இருந்தபோது அடைந்த மகிழ்ச்சிக்கு ஒரு நல்ல உவமை காட்டினாள். "அவர் என்னுடன் இருந்தபோது, என் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது. அது ஒரு சிறு மனமாக இருக்கவில்லை. ஒரு பெரிய ஊராக இருந்தது. திருவிழா நடத்தும் ஊரில் மூலைமுடுக்கெல்லாம் ஆரவாரமும் பரபரப்பும் களிப்பும் காணப்படும் அல்லவா ? அத்தகைய திருவிழா நடைபெறும் ஊர்போல் மகிழ்ந்தது என் மனம்'' என்றாள்.

அதே ஊர் ஒரு காலத்தில் பொலிவழிந்து பாழடைய நேரலாம். அப்போது திருவிழா இருக்காது. களிப்பும் ஆரவாரமும் காண முடியாது. அந்த ஊர் இன்னும் சீரழியத் தொடங்கும். காலப்போக்கில் ஊரார் வெளியிடங்களுக்குச் சென்று குடியேறி விடுவார்கள். அந்த ஊரில் காலி வீடுகளே காணப்படும். திருவிழா நடக்கும்போது பேரூராக இருந்த அதுவே, பொலிவிழந்து, மக்களும் இழந்து, வெறு மனைகள் நிற்கும் சிற்றூராகிவிட்டால், அந்த வீடுகளில் ஒன்றன் நிலைமை எப்படி இருக்கும் ? அந்த நிலையே தலைவன் பிரிந்த காலத்து மனத்திற்கும் உண்டு என்று கூறினாள். அதையும் தெளிவுபடுத்த வேண்டும் என்று எண்ணி அதைச் சிறந்த படமாக்கிக் காட்டினாள். அத்தகைய சிற்றூரில், வாழ்வோர் இல்லாத வறுமனை ஒன்றன் எதிரே முற்றத்தில் அணில் விளையாடும் காட்சியை அந்தப் படத்

தில் அமைத்தாள். அணில் அஞ்சி அஞ்சி ஓடி உணவு தேடும் இயல்பு வாய்ந்தது. அந்த அணில், குடியில்லாத பாழ்வீட்டின் முற்றத்தில் அஞ்சாமல் விளையாடும் அல்லவா? திருவிழா நடக்கும் சிறப்பு உடைய ஊரைக் காட்டி, வாழ்க்கையற்ற வறுமனை யின் எதிரில் அணில்விளையாட்டையும் காட்டினுள். இந்த இரண்டன் வாயிலாகத் தலைவனுடன் வாழ்ந்த மனத்தின் மகிழ்ச்சியையும் பிரிந்து வருந்திய மனத்தின் வாட்டத்தையும் புலப்படுத் தினுள் :

*காதலர் உழையர் ஆகப் பெரிதுஉவந்து*
*சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற ;*
*அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்*
*மக்கள் போகிய அணில்ஆடு முன்றில்*
*புலப்பில் போலப் புல்லென்(று)*
*அலப்பென் தோழி! அவர் அகன்ற ஞான்றே.*

—குறுந்தொகை–41

*[சாறு – திருவிழா. புலப்பில் – புலம்புஇல் – தனிவீடு. அலப்பென் – வருந்துவேன்].*

இவ்வளவு அழகிய வாழ்க்கைஓவியத்தை வரைந்தவர் எவரோ தெரியவில்லை. அவர் எவரா னும் ஆகுக. ஆனுல் அவர் வரைந்த ஓவியத்தில் அந்தத் தலைவியின் மனம், திருவிழா இழந்து, ஆரவாரம் இழந்து, பொலிவெல்லாம் இழந்து, தனிமை உற்று வாடுவதைக் காண்கிறோம். பரந்த பெரு மனம், சிறிய தனிக்குடிசை போல் சுருங்கி

விடக் காண்கிறோம். களிப்பும் எழுச்சியும் அடங்கிக் கவலையும் ஏக்கமும் பெருகிவிடக் காண்கிறோம். சிறிய வீட்டின் முற்றத்தின் எதிரே அணில் விளையாடும் அந்த நிலையை மறக்க முடியவில்லை. அணிலாடு முன்றில்—இதைத்தான் மறக்க முடியவில்லை. இவ்வாறே இந்தப் பாட்டைப் படித்த பலரும் உணர்ந்திருக்கின்றார்கள். உணர்ந்துதான், புலவரின் இயற் பெயரை மறந்துவிட்டாலும் அவரை அணிலாடுமுன்றிலார் என்று நினைவில் நிறுத்தலானார்கள்.

---

## 9. நல்ல ஆசை

குடும்பத் தலைவன் எடுத்த கடமையின் காரணமாக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தான். அந்தக் கடமை முடிய நாள் பல ஆயின. சில மாதங்களே ஆய்விட்டன.

அவன் பிரிவதற்குத் தயங்கித் தயங்கித்தான் பிரிந்தான். ஆனால் பிரிவு தவிர்க்க முடியாததாக ஆயிற்று. நினைத்தபடி மூலைவீட்டில் இருந்து வாழ உலகம் விடுமா ? உலகம் விட்டாலும் தலைவனுடைய மனம்தான் இடந்தருமா ? மனைவி மக்களோடு இருந்து வாழும் வாழ்வு சிறந்த வாழ்வுதான்; இன்ப வாழ்வுதான். ஆனால் உலகக் கடமையைச் செய்யத் தவறுகின்றவர்களுக்கு இல்வாழ்க்கை என்பது ஏது ?

இல்வாழ்க்கையின் இன்பத்தையும் உரிமையின் உயர்வையும் ஒருங்கே உணர்ந்தவன் தலைவன்; அதனால் வீட்டை விட்டுப் பிரிந்து செல்லவும் துணிந்தான்.

அவன் வீட்டை விட்டுப் பிரிந்து செல்லும்போது மனைவியும் கலங்கினாள்; அவனும் கலங்கினான். ஆனால் அவன்தான் தனியாகப் பிரிந்து சென்று வருந்த நேர்ந்தது. அவளை அவ்வாறு தனிமைத் துன்பம் நெருங்கவில்லை. காரணம், அவளிடம் தவழ்ந்து விளையாடிய கைக் குழந்தையே ஆகும். அந்தக் குழந்தை ஆண்குழந்தை. தந்தையின் தோற்றத்தின் எழிலையெல்லாம் நுட்பமாகக் கொண்டு விளங்கிய அந்தக் குழந்தை தோளிலும் மார்பிலும் மடியிலும் அன்புருவாய்த் தவழ்ந்து தன்னை வாழ்வித்தபோது, அவளுக்குத் துன்பம் மிகுவதற்கு இடம் இல்லை. தலைவன் வீட்டை விட்டுப் பிரிந்தபோது அந்தக் குழந்தைக்கு வயது ஆறு மாதம் அல்லது ஏழு மாதமே இருக்கும்.

மூன்று மாத காலம் தலைவன் வெளிநாட்டில் வெளியூரில் தங்கியிருந்தான், கவலைக்கு இடையே கடமையை எவ்வாறோ முடித்தான். திரும்பும் நாள் வந்தது. அன்று, ஊன் எல்லாம் உருக, உள்ளம் உருக, குடும்பத்தை நினைத்தான்; மனைவியை நினைத்தான்; குழந்தையை நினைத்தான்; ஒவ்வொரு வகை நினைப்பும், அவனுடைய உடலையும் உள்ளத்தையும் உருக்கிக் கரைத்துவிட்டது.

இது பல நூற்ருண்டுகளுக்கு முன்னே தமிழ் நாட்டில் வாழ்ந்துவந்த குடும்பங்களின் அனுபவ மான நிகழ்ச்சி. அந்தக் காலத்தில் மதுரையில் இளவேட்டஞர் என்ற புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அறுவை வாணிகம் (துணி வியா பாரம்) செய்துவந்தார். அதஞல் அவரை மதுரை அறுவை வாணிகன் இளவேட்டஞர் என்று நூல்கள் குறிக்கும். அந்தப் புலவரின் உள்ளத்தில் இந்த நிகழ்ச்சி பதிந்தது ; உள்ளத்தில் உணர்வு வடிவாய் மலர்ந்தது. புலவரின் உள்ளத்தில் ஓர் உணர்வு மலர்ந்தால் அது பாட்டுமணம் கமழாதிருக்க முடியு மோ ? அந்தப் புலவரின் உணர்வுமலர் இன்றும் நற்றிணையில் கமழ்ந்துகொண்டிருக்கிறது. அந்தப் பாட்டில் இந்தக் குடும்பத் தலைவனுடைய மனம் புலப்படுகின்றது.

இந்தத் தலைவன் அந்தக் காலத்தில் தன் நாட்டுக்குத் திரும்பித் தன் ஊரை அடைவதற்குப் பெரிய முயற்சி வேண்டும். விண்ணில் பறக்கும் விமானங்களும், இருப்புப்பாதையில் இயங்கும் புகைவண்டிகளும், தார்ப்பாதையில் ஓடும் மோட் டார்களும் இல்லாத பழங்காலத்தில் தேரும், குதி ரையும், தேரோட்டும் பாகனும் இல்லாமல் நெடுந் தொலைவு போய் வர முடியாது.

தலைவன் புறப்பட்டான். பாகன் உண்மை யாகவே மிக்க வேகத்தோடுதான் தேரைச் செலுத் திக்கொண்டு வந்தான். உயர்ந்த தேர் ; சிறந்த குதிரைகள் ; வல்லவஞன பாகன் — இந்தப்

பொருத்தம் நேர்ந்தபோது தேரின் விரைவுக்குக் குறைவு ஏது ?

ஆனல் தலைவனுடைய மனமோ இதைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அவன் கண்கள், வழியாய் அமைந்த முல்லைநிலத்தையும், ஆங்காங்கு இருந்த புதர்களையும், அவற்றில் பூத்த பூக்களையும் காணவில்லை. பொன்னிறப் பூக்கள் கொத்துக் கொத்தாய் மலர்ந்த கொன்றை மரங்களும் அவனுடைய கண்ணில் படவில்லை. அகக் கண் அழகான கற்பனையில் ஈடுபட்ட போது, புறக் கண் வேறு எதையாவது காணுமோ ? கண்டாலும் புறத்தே உள்ள பொருளின் அழகு அகத்தை எட்ட முடியுமோ ?

அவனுடைய அகக்கண் - கற்பனைக் கண் - கண்ட காட்சி என்ன ? தன்னுடைய வீட்டையே கண்டது. அந்த வீட்டில் விருந்தாளிகள் வந்த போதெல்லாம் முக மலர்ந்து வரவேற்றுப் போற்றிய தன் மனைவியையே கண்டான். அவளுடைய எழிலுருவத்தைக் கண்டான். பெருந் தோளும், இளமை எழிலும் கண்டான். அந்த வீடு அழகு மிக்கு விளங்குவதாக உணர்ந்தான். தன் குழந்தை தவழ்ந்து விளையாடும் ஏழுமாதக் குழந்தையாக இல்லாமல் சிறிது வளர்ந்து இருப்பதாகக் கண்டான். தளர்ந்து தளர்ந்து எடுத்தடி வைத்து நடை பயிலும் பத்துமாதக் குழந்தையாக இருக்கக் கண்டான். தன் அருமை மகனை விட்டுப் பிரிந்த நாளில் அவனுடைய அழகிய குழந்தைக்கண்களை உற்று

நோக்கி ஆர்வத்தோடு முத்தம் கொடுத்துவிட்டு வந்தான். அந்த அழகு மிக்க கண்களையே மீண்டும் கண்டான். அந்தக் கண்ணன் தள்ளாடி நடக்கும்போது, அவன்பக்கத்தே அணுகிச் சென்று அவன் விழாதபடி கைஏந்திக்கொண்டு நடக்கும் தன் மனைவியையும் அந்தக் கற்பனைக் காட்சியில் கண்டான். மகன், அழகிய சிறு கால்களால் நடந்து அசைந்து தள்ளாடும்போ தெல்லாம் அவனைத் தாங்க அசைந்து அசைந்து உடன்செல்லும் தன் வாழ்க்கைத்துணைவியைக் கண்டான். இது வரையில் அவன் கண்டதெல்லாம் காட்சியாகவே இருந்தது. திடீரென்று தன் துணைவி மகனிடம் கொஞ்சி அழைத்துப் பேசும் வாயசைவைக் கண்டான். கண்டதும், மகன் நடந்த நடை போதும், களைத்துவிடுவான் என்ற எண்ணத்தால், என் கண்ணே வா! அப்பா வா! வந்துவிடு அப்பா!' என்று அவள் அழைப்பதாகக் கற்பனை செய்துகொண்டான். கற்பனை அந்த நொடியிலேயே கலைந்தது!

கண்ணின் வேட்கையைக் கற்பனை தீர்க்கும். ஆனல் செவியின் வேட்கையைக் கற்பனை தீர்க்க வல்லதோ? அருமை மனைவியையும், மகனையும் அகக் கண்ணுல் கண்டு வழியெல்லாம் மறந்திருந் தான். அந்தச் சொற்களை "வந்துவிடு அப்பா, வந்துவிடு" என்று மகனேடு கொஞ்சிய அந்தச் சொற்களைச் செவி கேட்க விழைந்தபோது கற்பனை கலைந்தது. இன்னும் வீடு வரவில்லை, ஊரும் வர

வில்லை, நாடும் வரவில்லை. எங்கோ காட்டு வழியில் தேர் போய்க்கொண்டிருந்தது.

பாகனைப் பார்த்தான்; "விரைந்து ஓட்டுக" என்றான். அந்தப் பாகன்மேல் குற்றம் இல்லை. அவன் என்ன செய்வான்? தேர் வேகமாகத் தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் தலைவனுடைய மனவேகத்தைப் பிடிக்க முடியுமா?

"விரைந்து ஓட்டுக" என்றான் தலைவன். அதற்குக் காரணத்தையும் சொன்னான். அவன் பாகனிடம் சொன்னது என்ன? அது அந்தப் புலவரின் பாட்டாக அமைந்துவிட்டது.

*செல்க பாகநின் செய்வினை நெடுந்தேர்;*
*விருந்து விருப்புறூஉம் பெருந்தோள் குறுமகள்*
*மின்னொளிர் அவிரிழை நல்நகர் விளங்க*
*நடைநாள் செய்த நவிலாச் சீறடிப்*
*பூங்கண் புதல்வன் தூங்குவயின் ஒல்கி*
*'வந்தீக எந்தை' என்னும்*
*அந்தீங் கிளவி கேட்கம் நாமே.*

—நற்றிணை – 221

[நகர் - வீடு. சீறடி - சிறு பாதம். தூங்குவயின் - அசையும்போது, ஒல்கி - தளர்ந்து. அந்தீங்கிளவி - அழகான இனிய சொல்.]

———

# 10. ஒரு குறை

இந்த நாடு உழவர்கள் மிகுந்த நாடு. உழவர்களின் வாழ்க்கையில் தை மாதம் வரைக்கும் உழைப்பும், அதன் பிறகு ஓய்வும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. மழைக்காலம் தொடங்கியதும் உழவு தொடங்கும்; பல வகையான கடமைகள் பெருகும். பயிர்கள் எல்லாம் செழித்து வளர்ந்து பயன் தந்து முடிந்ததும் – அறுவடையானதும்–பெரும்பாலும் எல்லாக் கடமைகளும் முடிந்துவிடும். மார்கழி மாத இறுதியிலேயே எல்லாம் முடிந்துவிடுவது உண்டு. களஞ்சியங்களில் நெல் முதலியவை குவியும். வயல்களில் உழவர்களுக்கு வேலை இருக்காது. உடனே வீட்டையும் மற்றவற்றையும் அழகு படுத்தத் தொடங்குவார்கள். வாழ்க்கையில் உழைப்பின் முடிவில் காணும் இன்பம் அழகும் புதுமையும் கலந்ததாக இருக்க வேண்டும் அல்லவா? ஆகையால் எல்லாவற்றையும் அழகுபடுத்திப் புதுமையாக்கிக் களிப்பார்கள். இதுதான் தைமாதத்தின் முதல்நாளில் அவர்கள் கொண்டாடும் அருமையான திருநாள்–பொங்கல் திருநாள்–ஆகும். மறுநாள் முதல் சில நாட்கள் வரையில் வாழ்க்கையில் ஊக்கமும் இன்பமும் நிரம்பக் கூடிய வகையில் திருவிழாக்கள் கொண்டாடுவார்கள். அவற்றுள், உழவர்களுக்கு உறுதுணையாக அமைந்துள்ள மாடுகளின் திருவிழா–மாட்டுப்பொங்கல்–சிறந்ததாகும்.

இவைகள் எல்லாம் முடிந்த பிறகு அடுத்த மழைக் காலம் வரையில் வேலை இருக்காது. அந்தக் காலத்தில்தான் அரசர்கள் படை திரட்டிப் போருக்குச் செல்வது உண்டு. அந்தப் படை வீரர்கள் பெரும்பாலும் உழவர்களாகவே இருப் பார்கள். போர் முடிந்ததும், அடுத்த மழைக்கு முன்னே வீட்டுக்கு வந்து சேர்வதாகச் சொல்லி விட்டுத் தங்கள் மனைவியரிடம் விடைபெற்றுச் செல் வார்கள். வீட்டில் ஆற்றியிருக்கும் மனைவியர் அந்த மழைக்காலத்தை எதிர்நோக்கிக்கொண் டிருக்க, போர்க்களத்தை அடுத்த பாசறையில் அவர்களுடைய கணவன்மார் போரின் முடிவை எதிர்நோக்கிக்கொண் டிருப்பார்கள். இதுதான் பழங்காலத் தமிழ்நாட்டில் இருந்த நிலை.

இவ்வாறு நாட்டுத் தொண்டில் ஈடுபட்ட ஒருவனைப் பற்றி அகநானூற்றில் உள்ள ஒரு பாடல் சிறந்த சொல்லோவியமாக அமைந்திருக்கின்றது. அவன் மேற்கொண்ட கடமை-போர்த் தொழில்—முடிந்துவிட்டது. பகையரசன் பணிந்து திறை கொடுத்துவிட்டான். தன் அரசன் பகை தணிந்து போரை நிறுத்தினான். மழைக்காலமும் வந்து விட்டது. வானத்தில் முகில்கள் இடித்து முழங்கிப் பெய்யத் தொடங்கிவிட்டன. தன் மனைவியிடம் சொல்லிவிட்டு வந்த சொல்லை—கார்காலத்திற்கு முன்னே திரும்பிவிடுவேன் என்று சொல்லி வந்ததை – நினைத்துக்கொண்டான். தன் தேர்ப் பாகனை அன்போடு நோக்கிப் புறப்படுமாறு பணித்

தான். தேரும் புறப்பட்டது. விரைந்தே ஓடியது. குதிரைகளும் சிறந்த பயிற்சி பெற்றவை. பாகனும் வல்லவன். ஆகையால், தலைவன்மனம் போல் தேர் ஓடிவந்தது.

ஆயினும், தலைவனுக்கு ஒரு சிறு குறை தோன்றியது. "ஊரை நெருங்கி வந்துகொண் டிருக்கின்றோம். இன்று இரவே போய்ச் சேர்ந்துவிடுவோம்" என்று பாகன் உறுதி அளித்தபோதுதான் அந்தக் குறை தோன்றியது. அது என்ன குறை ?

தலைவன் தை மாதத்தில் வீட்டை விட்டுப் பிரிந்துவந்தான். இப்போது ஏறக்குறைய ஐந்து மாதங்கள் ஆகிவிட்டன. தன் அருமைக் காதலியையும் மகனையும் பிரிந்து வந்தான். அவர்களைக் காண வேண்டும், விரைந்து போய்க் காணவேண்டும் என்று பேராவல் கொண்டு நினைந்து உருகினான். பாகன் திறமை யெல்லாம் காட்டித் தேரை விரைந்து செலுத்துவது கண்டு மகிழவும் மகிழ்ந்தான். "எப்படியும் இன்று இரவே ஊர்க்குப்போய்ச் சேர்ந்திடுவோம்" என்ற நம்பிக்கையும் அவனுக்கு ஏற்பட்டது. அப்படியிருக்க, அவன்மனத்தில் தோன்றிய குறை என்ன ?

அன்று இரவு போய்ச் சேர்வது என்றால், இரவில் நெடுநேரம் கழித்தும் போய்ச் சேரவேண்டியிருக்கும். அவ்வாறு நெடுநேரம் கழித்து இரவில் சென்று வீட்டை அடைந்தால், தன் குழந்தை—இளஞ் செல்வன்—அயர்ந்து உறங்குகின்ற காட்சி

யையே காணவேண்டியிருக்கும் அல்லவா? சிறிது முன்னமே சென்றால் - விளக்கு வைத்த உடனே சென்று சேர்ந்தால்—தன் மனைவியின் வரவேற்பையும் பெற முடியும்; தன் மகனுடைய குழந்தைவிளையாட்டையும் மழலைமொழியையும் கண்டு கேட்டு மகிழ முடியும்; மகனோடு தாய் கொஞ்சிப் பேசும் இன்ப ஒலிகளையும் கேட்டு உள்ளம் குளிர முடியும். இவ்வாறு எண்ணிய போதுதான் தலைவன்மனத்தில் இந்தக் குறை தோன்றியது. "தேர் இந்த வேகத்தில் சென்றால், உறங்கிய மகனையும் அயர்ந்து சோர்ந்த மனைவியையுமே காண முடியும். இதைவிட வேகமாகச் சென்றால், விளக்கு வைத்தவுடனே போய்ச் சேரலாம். அப்போது மாலையின் அழகோடு கூடிய குடும்ப அழகைக் காணலாம். ஆகையால் பாகன் இன்னும் விரைந்து தேர் ஓட்ட வேண்டும்" என எண்ணினான்.

பசுக்கள் மாலை நேரத்தில் கழுத்தில் மணி ஒலிக்கக் கன்றுகளை நினைந்து 'அம்மா' என்று அழைத்து வீடு திரும்பும் காட்சியும் அவற்றின் பின்னே இடையர் குழல் ஊதிக்கொண்டு அசைந்து வரும் காட்சியும் அவனுடைய நினைவிற்கு வந்தன.

அன்று மாலை தோன்ற இருந்த நிலவும் நினைவிற்கு வந்தது. தன் வீட்டிலிருந்து இளம் பிறையைக் கண்ட நாட்களை நினைத்தான். அந்த நாட்களில் குழந்தைக்குப் பாலூட்டுவதற்காகத்

தன் மனைவி அந்த நிலாவைக் காட்டி "நிலா நிலா வா வா" என்று விரலால் அழைக்கும் வழக்கத்தையும் நினைத்தான். "என் மகனோடு விளையாட வருவாயா? நிலாவே! வந்தால் உனக்கும் பால் தருவேன்" என்று இனிய சொற்களால் சொல்லிக் குழந்தையின் அறிவை மயக்கிப் பாலூட்டும் பாங்கும் நினைத்தான். அப்போது அவள் மகனோடு கொஞ்சிப் பேசும் சொற்களையும் அவற்றின் இனிமையையும் எண்ணி உருகினான். பெண்ணின் சொற்களில் இயற்கையாக உள்ள இனிமை வேறு. அவளே தாய்மை பெற்றுக் குழந்தையோடு கொஞ்சும்போது அந்தச் சொற்களில் உள்ள இனிமை முன்னிலும் சிறந்துநிற்பதை அறிந்தவன் அவன். அதனால் அந்தக் காதலியின் சொற்கள் குழந்தையோடு கொஞ்சும் சொற்களாக மாறும் போது பெறும் இனிமையை அவனால் மறக்க முடியவில்லை. அவன்நாவில் அந்த இனிமை ஊற்றெடுப்பதை நினைத்தான். நினைத்ததும் அதற்கு உவமை தேடினான். தன் நாவில் அவ்வாறு உணர்ந்துள்ள இனிமை ஊற்றையே எண்ணலானான். அது வேறொன்றும் இல்லை; சிறந்த நெல்லிமரத்தில் காய்த்த நெல்லிக்காயைத் தின்ற பிறகு நீர் குடித்து உணரும் இனிய சுவையே அது.

மாலைக் காட்சி, மாலை மதியம், மகனுக்காக நிலாவை அழைக்கும் தாய், அவளுடைய சொற்கள், அந்தச் சொற்களின் இனிமை இவை யாவற்

றையும் காணக் கூடிய வாய்ப்பு இருக்கும்போது அதை நெகிழவிடுவது குறை அல்லவா? அந்தக் குறை தீர ஆவல்கொண்டான். பாகனிடம் தன் வேட்கையைச் சொன்னான்; "என் மகன் அயர்ந்து உறங்குவதற்கு முன்னே அவனுக்குப் பாலூட்டுவதற்காக 'நிலா நிலா வா வா' என்று நிலாவை அழைத்து என் மனைவி கொஞ்சிக்கொண்டிருக்கும் வேளையிலேயே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால் நல்லது. அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டுமே. ஆகையால் இன்னும் விரைந்து செலுத்துக" என்று வேண்டினான்.

*கடவுக காண்குவம் பாக!*
*புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்*
*நீர்குடி சுவையின் தீவிய மிழற்றி*
*"முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்!*
*பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி*
*வருகுவை யாயின தருகுவென் பால்" என*
*விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்*
*திதலை யல்குலெங் காதலி*
*புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.*

—கோற்றங் கோற்றனூர்: அகநானூறு – 54

எளிய வாழ்க்கையும் உயர்ந்த நோக்கமும் பழம் பாடல்களில் படமாக்கப்பட்டுள்ளன என்பதற்கு இந்தப் பாட்டு ஓர் எடுத்துக்காட்டாகும். இங்கே குறிக்கப்படும் தலைவன்வாழ்க்கை எளிய வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒன்று, நாட்டுக்குத் தொண்டு

செய்யும் முறையில் போர் வீரனுகக் கடமை ஆற்றுவது. மற்ருென்று, குடும்பத் தலைவனுக இருந்து அன்பைப் பெருக்குவது. நாட்டுத் தொண்டு முடிந்ததும் வீட்டை நினைத்தான் வீரன்; அன்பால் நெகிழ்ந்தான், போரில் முழுகியிருந்த மனம், அன்புவாழ்க்கையை நாடியது. வெற்றிச் செல்வத்தைத் தேடி அலைந்த மனம், குடும்பச் சிறப்பை நாடி அமைதியுற்று உருகியது. ஒன்று முடிந்ததும், மற்ருென்று ஈர்த்தது. விரைந்து செல்வோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டும், ஒரு குறை தோன்றியது. அந்தக் குறையும் எளிய குறையே; ஆனுலும் அதில் உயர்ந்த நோக்கமே குடிகொண்டிருந்தது. மனைவியும் குழந்தையுமாகிய அன்புருவங்களைத் தேடிச் சென்றவன், அந்த அன்புகளிடம் புரியும் காட்சியையே முதலில் காண விழைந்தான். இந்தக் குறை தீரவேண்டும் என்றே பாகனை வேண்டினுன். எளிய குறையே! ஆனுலும் உயர்ந்த அன்பு அவன்உள்ளத்தில் குடிகொண்டிருந்தது அல்லவா?

———

# 11. நினைப்பா அது?

தபால், தந்தி முதலிய நாகரிக அமைப்புக்கள் ஏற்பட்ட பிறகு, மக்கள் வாழ்க்கை எவ்வளவோ மாறுதல் அடைந்துவிட்டது. இந்தக் காலத்தில், சென்னையிலிருந்து பம்பாய்க்கு ஒருவர் செல்வதாக

இருந்தால், வீட்டாரும் கவலையில்லாமல் அனுப்பு கின்றார்கள் ; அவரும் பயணத்தைப் பற்றி அஞ்சா மல் புறப்படுகின்றார். புறப்பட்டுப் போய்ப் பம்பாய் நகரத்தைச் சேர்ந்தபிறகு, அவர் அங்கிருந்து வீட் டாருக்கு ஒரு தந்தி கொடுத்து, "நலமாக வந்து சேர்ந்தேன்" என்று தெரிவிக்கலாம். தபாலில் விரிவாக எழுதி, ரயிலில் வந்தபோது கண்டவை, கேட்டவை, தட்ப வெப்பநிலை, பம்பாய்ச் செய் திகள், புதுமைகள் முதலான எல்லாவற்றையும் வீட்டாருக்குத் தெரிவிக்கலாம். தொடர்ந்து கடி தங்கள் எழுதலாம். வீட்டாரும் எழுதலாம். நேரில் கண்டும் கேட்டும் அளவளாவ முடியாத குறையே அல்லாமல், மற்ற எல்லா நலமும் உண்டு.

ஆனால், போக்கு வரவுக் கருவிகள் குறைவாக இருந்த பழங்காலத்தில், தபால் தந்தி முதலான அமைப்புக்கள் இல்லாதபோது வெளிநாட்டுக்குச் சென்றவர் பிரியும்போது பெருங் கவலையோடு பிரிந்திருக்க வேண்டும் ; பிரிவுக் காலத்தில் பொல் லாத கவலையும் துயரமும் சூழ்ந்து வருத்தியிருக்க வேண்டும். திரும்பி வந்து நலமாக வீடு எய்திய காலத்திலோ, இவற்றிற்கெல்லாம் ஈடாக அளவற்ற மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும்.

இந்தக் காலத்தில் பிரிந்து சென்றவர் கடிதம் எழுதாமல், சிலநாள் இருந்துவிட்டுத் திரும்பி வந் தால், வீட்டார், "எங்களை மறந்துவிட்டாற்போல் தெரிகிறது. பம்பாயின் பெருமைதான் பெருமை. எங்கள் நினைவே வந்திருக்காதுபோல் தெரிகின்

றது” என்று சொல்வார்கள். ஆனால், பழங்காலத்திலோ, தபால் தந்தி இல்லாத காரணத்தால், இந்தக் கேள்வி தவிர வேறு கேள்விக்கே இடம் இல்லை. திரும்பி நலமாக வந்து சேர வேண்டுமே என்ற ஏக்கம் கவலை துயரம் எல்லாம் நிறைந்திருக்கும். திரும்பி வந்த பிறகு இத்தனையும் பறந்துபோகும். வந்தவுடன் கேட்கும் கேள்வி இதுபோன்றதாகவே இருக்கும்.

இப்படித்தான் பழந்தமிழரின் வாழ்க்கையில் நிகழ்ந்துவந்தது என்று பல சங்கப்பாட்டுக்கள் விளக்குகின்றன.

ஒரு குடும்பத் தலைவன் பொருள் தேடவேண்டும் என்று எண்ணி வடநாட்டுக்குச் சென்றான். குடும்பம் பெருங்கவலையில் ஆழ்ந்திருந்தது. கடமையை முடிக்கப் பலமாதங்கள் ஆயின. கடமையை ஒருவாறு முடித்ததும் தலைவன் திரும்பினான். திரும்பி வீட்டுக்கு வந்ததும், எங்கும் மகிழ்ச்சி பொங்கித் ததும்பியது. ஆயினும் அந்த மகிழ்ச்சியில் பழைய கவலையின் வடுக்கள் காணப்பட்டன.

சிறிது நேரம் ஒருவரோடு ஒருவர் என்ன பேசுவது என்று தெரியவில்லை. குடும்பத் தலைவியோடு நெருங்கிப் பழகியவள் ஒருத்தி இருந்தாள். அவள் அப்போது அங்கே வந்து சேர்ந்தாள். “என்ன ஐயா, போன இடத்தில் எங்களை எல்லாம் மறந்துவிட்டாற்போல் இருக்கிறதே. எப்போதாவது நினைத்துப் பார்த்தது உண்டா?” என்றாள்.

“ நினைத்தது உண்டா ?” என்ற கேள்வி தலைவன் உள்ளத்தில் நேரே சென்று பாய்ந்தது. உள்ளத்தில் இருந்து கலக்கிய பழைய கவலையை அவன் எண்ணினான்.

“ நினைத்தது உண்டா என்று கேட்கின்றீர்களே ! நினைப்பு மட்டுமா அது ? உணர்ந்து உணர்ந்து எண்ணியிருக்கின்றேனே ! உணர்ந்து எண்ணி எண்ணி நினைந்திருக்கின்றேனே ! அவ்வளவு மட்டுமா ? நினைப்பின் எல்லையை எட்டிய பின் மருண்டு கலங்கியிருக்கின்றேன். ‘ என்ன உலகம் இது, என்ன உலகம் இது, இப்படியுமா உலக அமைப்பு இருக்க வேண்டும் ? பொருள் காரணமாக இவ்வளவு ஏக்கமா ? இவ்வளவு தொலைவில் வந்து செய்யும் முயற்சியா ? நல்ல உலகம் அப்பா ! நான் ஓர் இடம், அவள் ஓர் இடம் - இவ்வளவு தொல்லையா ? இப்படியா இந்த உலகத்தில் பொருள்நிலை அமைந்திருக்க வேண்டும் ?” என்று பலவாறு உலகத்துப் பண்பை எண்ணி எண்ணி மயங்கியிருக்கின்றேன். இவையெல்லாம் வெறு நினைப்புமட்டுந்தானா ?” என்றான்.

அவனிடத்தில் அப்போது பழைய கவலை ஏக்கம் துயரம் இவை இல்லை அல்லவா ? குடும்பத்தாரைக் கண்டதும் அவை மறைந்துவிட்டன ஆகையால், தன் முகத்தின் நிலையைச் சான்றாகக் காட்டி விளக்க முடியவில்லை. ஆயினும், அதையும் விளக்க முயன்றான்.

“ நான் பட்ட துயரமும் ஏக்கமும் கவலையும் வெள்ளம் போன்றவை. ஆனால் இப்போது அவை இல்லை. வேனில்காலத்தில் ஆற்றில் காணும் நீரைக் கண்டு இவ்வளவுதானா வெள்ளம் என்று எண்ணி விட முடியுமா ? கரையிலிருந்த மரங்களைத் தாக்கிப் படியும் அளவிற்கு ஆற்றில் வெள்ளம் வந்த காலத்தை உணர வேண்டும். வெள்ளமும் தணிந்து, நீரும் வாய்க்கால் வழியாக ஓடிப் பாய்ந்து இறுதியில் ஊற்றுநீரை இறைத்து உண்ணுமாறு முடிகின்றதே. ஆனால் ஊற்றுநீரைப் பார்த்துவிட்டு, ஆற்றில் வெள்ளம் வருவதில்லை, வந்ததில்லை என்று சொல்லி விட முடியுமா ? இப்போது என் முகமகிழ்ச்சியைக் கண்டு, பிரிவுக் காலத்தில் ஏக்கமும் நினைப்பும் இருந்ததில்லை என்று சொல்லிவிட முடியுமா ? எவ்வளவோ ஏங்கினேன், எண்ணினேன், நினைந்தேன், மருண்டேன் ” என்று எடுத்துக் கூறினான்.

ஔவையார் பாடிய பழம்பாட்டு ஒன்று இதை உணர்த்துகின்றது :

*உள்ளினென் அல்லெனோ யானே உள்ளி*
*நினைந்தனென் அல்லெனோ பெரிதே நினைத்து*
*மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே*
*நீடிய மராஅத்த கோடுதோய் மலிர்நிறை*
*இறைத்துணச் சென்றற் றாஅங்கு*
*அனைப்பெருங் காமம் ஈண்டுகடைக் கொளவே.*

— குறுந்தொகை – 99

[கோடு – தொகுதி. மலிர்நிறை – வெள்ளம்.]